Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவச் சிக்கல்கள்

தி. தாமரைச்செல்வி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

oundat

rukul k

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவச் சிக்கல்கள்

DONATION
7894
7894
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय पुस्तकालय

தி. தாமரைச்செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுவை-3

FORWARDED FREE OF COST; AND WITH THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF EDUCATION; GOVERNMENT OF INDIA, NEWDELHI

விற்பனை உரிமை

ஐந்திணைப் பதிப்பகம்

279, பாரதி சாலை
திருவல்லிக்கேணி
சென்னை-600005

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல்	:	வள்ளுவச் சிக்கல்கள்
ஆசிரியர்	:	தி. தாமரைச்செல்வி
பதிப்பு	:	முதற் பதிப்பு, அக்டோபர் 89.
உரிமை	:	பதிவு செயராம் பதிப்பகம், புதுவை-1.
விலை	:	ரூபாய் 12/-
கூடுதல் பக்கங்கள்	:	XII + 78 = 90
விற்பனை உரிமை	:	ஐந்திணைப் பதிப்பகம் 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005
அச்சகம்	:	SRI YESES PRINT HOUSE, 132, Jani John khan Road, Royapettah, Madras-600014. Phone : 833231

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்,
எம்.ஏ., பி.எல்., பி.டி., பிஎச்.டி.,
துணைவேந்தர்,
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுவை.

வாழ்த்துரை

புதுவைத் தமிழ் என்றுமே புதுமைத் தமிழ்தான். மாகவி பாரதியார், அவர் தம் தாசன் பாவேந்தர். இவர்களால் அணியும், மணியும் அணிவிக்கப்பட்டு அழகுடன் மிளிரும் நம் புதுவைத் தமிழுக்கு நம் தமிழ்த் துறையும் ஆண்டுதோறும் பல வாசமிகு வாடா மலர் மாலைகளை அணிவித்து வருகிறது.

இதில் புதுவைத் தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர், க. ப. அறவாணன் அவர்களின் பணி பெரும் பணி. அவருடன் உள்ளோர் பணி அறப் பணி. எங்கள் ஆசிரியப் பெருமக்களும், ஆய்வாளர்களும் ஒரு ஒன்பதின்மர் தங்களின் ஆய்வுச் சிந்தனைகளை எழுத்து வடிவில் உருவாக்கி ஒன்பது நூல்களை இன்று வெளிக் கொணருகின்றார்கள். இந்த நவரத்தின அணி பல்கலைக்கழகம் நான்காவது ஆண்டை நிறைவு செய்யும் இந்நன் நாளில் தமிழன்னைக்கு நாங்கள் அளிக்கும் பாத பூசை.

வாழ்க புதுவையின் தமிழ்ப்பணி. வளர்க இதன் தொடர்புடையோர் யாவரும்.

கி. வேங்கடசுப்பிரமணியன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணிக்கை

எனை ஈன்றெடுத்த
தாய்க்கும் தந்தைக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
எம்.ஏ., பிஎச்.டி., டிப். மானிடவியல்,
இணைப் பேராசிரியர்,
தமிழ் மொழித் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-5

முன்னுரை

தண்டமிழில் தரமாய் விளங்கும் தலையாய நூல்களுள் திருக்குறளும் ஒன்று என ஆன்றோர் ஏறத்தாழப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே திறனாய்ந்து உரைத்தனர். இன்றும் வாழும் வள்ளுவமாக விளங்கும் திருக்குறள் காலந்தோறும் பல்வேறு புதிய புதிய கருத்துக்களைக் கொண்டும் கொடுத்தும் புதுமலர்ச்சி பெற்று விளங்குகின்றது. பழைய உரைகாரர் பதின்மரே அன்றிப் புத்துரை கண்ட புலவர்களும் அறிவியலாளரும், அரசியலாளரும், தத்துவ நெறியினரும், பொருளியல் அறிஞரும் குறளுக்குப் புதிய புதிய உரைகளை—புதிய புதிய அணுகு முறைகளை உருவாக்கி உயர்வு தந்துள்ளனர். அவ்வகையில் 'வள்ளுவச் சிக்கல்கள்' எனும் இந்நூல் நம்முன் சில சிக்கல்களை வைத்துத் தீர்வு காண முனைகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்வியலே சிக்கலாக விளங்கும் இக்காலத்தில் நூலாசிரியர் துணிந்து வள்ளுவச் சிக்கல்களை நம்முன் வைத்துள்ளார். வள்ளுவத்தில் சிக்கலா அல்லது வள்ளுவ அணுகு முறையில் சிக்கலா என்பதுதான் கேள்வி. வாழும் இயல்புகளைக் கூறும் வள்ளுவத்தில் வடநெறியையும், தம் புலமைத் திறத்தையும் புகுத்திச் சிக்கல்களை உரையாசிரியர்கள் உருவாக்கி இருப்பதாகப் பலர் கருதுவர். நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் பரிமேலழகரின் உரையை மறுத்து 'திருவள்ளுவர் திடுக்கிடுவார்' என்னும் நூலைப் பல ஆண்டுகட்கு முன் படைத்தார். புலவர் குழந்தை 'திருக்குறளும் பரிமேலழகரும்' எனும் நூலைத் தந்தார். இன்றும் வள்ளுவரின் மெய்ப் பொருளை அறிஞர் ஆனந்தனார் போன்றோர் வள்ளுவர்க்குப் பின்னையோர் தந்த அணுகுமுறைகளை மறுத்து, புதிய புதிய சிந்தனையை ஆய்வுலகத்திற்குத் தந்துள்ளனர். வள்ளுவத்தில் இருக்கும் சிக்கல்களைக் காட்டிலும், வள்ளுவத்தை அணுகும் முறையில்தான் சிக்கல்கள் மிகுதியாக உள்ளன என ஆய்வுகள் நமக்குக் காட்டுகின்றன.

இந்நூலின் முதல் கட்டுரை, இயல்புடைய மூவர் யார் என்பதற்குத் தீர்வு காண முனைகின்றது. உரையாசிரியரும் பிறரும் சடங்கு நெறியில் நின்று கூறும் மூவரை மறுத்து வள்ளுவர் கூறும் மூவர், பெற்றோர், மனைவி, மக்கள் எனச் சுட்டுகின்றது. தொடர்ந்து, வள்ளுவத் தலைவிதியா ஊழ்...? எனும் கட்டுரை, ஊழ் என்பது முயற்சிதான் என்பதனை முனைந்து காட்டுகின்றது. வள்ளுவம், கூறும் ஊழ் தமிழ் ஆராய்ச்சியின் ஆய்வுக் கருப்பொருளாகப் பல நிலைகளில் விளங்கி வருகின்றது. தத்துவ நெறியாளர் முதல், பொதுவுடைமையாளர் ஈறாக ஊழ் சிக்கலுக்குரியதாகவே விளங்கி வருகின்றது. இந்தியச் சிந்தனையும் சிறப்புக்குரிய நூலாக விளங்கும் நூல் இன்னும் ஆராயப்பட வேண்டிய நிலையில்தான் உள்ளது. தமிழ் முனிவர் தவத்திரு குன்றக்குடி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடிகளார் ஊழினைச் 'சூழல்' என்னும் பொருளில் புதிய சிந்தனையைத் தூண்டுவது குறிப்பிடத்தக்கது. ஊழின் சிக்கலைத் தீர்க்கப் பல் ஊழிக்காலம் காத்து இருத்தல் வேண்டும் போலும். மூன்றாம் கட்டுரை 'தும்மல்' பற்றியதாகும். தும்மல் நம்முடைய பழக்கவழக்கங் களில் இடையூறு தருவதாகக் கருதுவர். நூலாசிரியர் தும்மல் குறிப்புகளைக் கொண்டு 'ஒருவன் ஒருத்தி' கோட்பாட்டை வள்ளுவர் விளக்குகிறார் என்பது புதிய சிந்தனையாக விளங்குகின்றது. உரிமை விழையும் மகளிர் கொழுநன் வழிபாடு குறித்து யாது கருதுகின்றனர் என்பதனை இக்கட்டுரை சித்தரிக்கின்றது. சிக்கலுக்குரிய இக்கருத்தினை நூலாசிரியர் குடும்பக் கடமைகளில் ஒன்றாகக் கருதிக்கொள்கைவழிபாடாக கொள்கின்றார். இந்நூலின், இறுதிக் கட்டுரை, வள்ளுவத்திற்குத் தேசிய நூல் எனும் சிறப்பினைத் தரவேண்டுமென்று வலியுறுத்து கின்றது. முன்னையோர், உலகப் பொது மறை எனப் போற்றியமை நினைவு கூரத்தக்கது.

நூலாசிரியர் செல்வி தாமரைச் செல்வி இவ்வைந்து கட்டுரைகளிலும் தாம் கூற வந்த கருத்துக்களை நன்கு வகைதொகைப் படுத்தித் திறனாய்ந்து முடிவுகளைக் கூறுவது அவர் தம் ஆய்வு அணுகு முறையைக் காட்டு கின்றது. சிக்கல்களுக்குரிய தீர்வுகளில் கருத்து வேறுபாடு கள் ஏற்படுவது இயற்கை. காலமும், களமும், கருத்தும் வாய்க்க வாய்க்கச் சிக்கல்கள் விரைவில் சீர்படும். திருக்குறளில் பெரிதும் ஈடுபாடு கொண்ட கால்வழியினர் இந்நூலாசிரியர். வள்ளுவ நெஞ்சமும் வாழ்வியல் நெறி யும் கொண்டு துலங்கும், செல்வி தாமரை ஆய்வுலகில் மலர்ந்து மணம் வீசிச் சிறக்க நல்வாழ்த்துக்கள். நுட்பமும் திட்பமும் மிக்க அரிய நூல்களைப் படைத்து மேன்மேலும் வளர்க என வாழ்த்துகின்றேன். நூலாசிரி யரின் முயற்சியைத் தமிழுலகம் ஏற்றுப் போற்றுமாக.

நாள் : 19.09.89 **இ. சுந்தரமூர்த்தி**
இடம் : சென்னை - 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முனைவர் அ. அறிவுநம்பி
இணைப் பேராசிரியர்,
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுவை.

அறிமுகவுரை

புரட்சிப் பாவலர் பாரதிதாசனாரின் 97ஆம் பிறந்த நாள் விழா 1987ஆம் ஆண்டு ஏப்பிரலில் புதுவையில் நிகழ்ந்த போது கருத்தரங்க அறையில் கைநிறைய நூல்களுடன் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தார். தமிழ்ப் பெருமக்களுக்கு வணக்கம்கூறி நூலையும் வழங்கியதோடு கருத்தரங்கின் உரைகளையும் கூர்மையாகச் செவிமடுத்தார். அவர் வழங்கிய நூல் **புலவர் தியாகராசன்** என்பவரால் உருவாக்கப் பெற்ற **'திருக்குறள் – வாழ்க்கை நூல்'** என்ற பெயரினது. புலவரின் திருமகளான அப்பெண் **'திருக்குறள் பதிப்புகள்'** பற்றி இளம் முனைவர் (எம்.பில்) பட்டத்திற்கு ஆய்வு செய்தவர் என்ற செய்தி கிடைத்தது. தலைமுறை தலைமுறையாகப் புகழ்பெறும் திருக்குறளைத் தலைமுறை தலைமுறையாகக் கற்றும் அதன்பயனாய் நூல்கள் வெளியிட்டும் சிறப்புப் பெறுவது குறித்தற்குரியதே!

செல்வி தி. தாமரைச் செல்வி, ''தந்தைசொல் மிக்க மந்திரமில்லை'' என்பதை மேலும் நிறுவுகின்றவர். முனைவர் (டாக்டர்) பட்டத்திற்காகத் **'திருக்குறள் காட்டும் தமிழர் சமூக நிறுவனங்கள்'** என்ற தலைப்பில் முப்பாலை ஆய்ந்து வருபவர். குறள் சுட்டுகின்ற இனிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நற்குணங்களின் ஒருங்கிணைப்பே அவருள்ளம். அயரா உழைப்பும், ஆழமான சிந்தனையும் இவருக்குக் கைவரப் பெற்றவை. சிந்திக்கத் தூண்டும் வினாக்களை எழுப்பி, உரிய முறையில் விவாதித்து, ஏற்கத் தகுந்த விடைகளைத் தரும் முயற்சியே இந்நூலில் படர்ந்துள்ளது.

சமயக் கண்ணாடி யணிந்து திருக்குறளை நோக்கியவர்கள் உண்டு. இயக்கப் பார்வையுடன் பொய்யா மொழியாரை அணுகி அவரைக் கட்சிச் சிமிழுக்குள் அடைத்தவர்கள் உண்டு. பொதுமறையைத் தந்தவரைத் தம் அணியினரே எனக்காட்டக் குறட்பாக்களுக்குப் புதுவுரைகள் புனைந்தவர்களும் உண்டு. இந்தச் தற்சார்புப் பார்வைகளிலிருந்து விலகி, குறுகிய நோக்கங்களுக்கு அப்பாலிருந்து கொண்டு முப்பாலை ஒரு சமூக நூலாகக் காண்கின்றார் நூலாசிரியர். சமூகவியல் அடிப்படையில் திருக்குறளை உற்றுநோக்கிப் புதிய சிந்தனைகளை விதைக்க நூலாசிரியர் முயலுகிறார்.

முழுமையாக விளங்கிக் கொள்ள இயலாதவாறு பல குறட்பாக்களின் போக்குகள் காணப்பெறுகின்றன. அக் குறட்பாக்களை மேலும் சிக்கல் நிறைந்தவைகளாக ஆக்கியவர்கள் உரைவகுத்தோர். வள்ளுவரின் கொள்கைகளை மழுங்கடித்த உரைகள், மறுதலித்த உரைகள், மாற்றிச்சுட்டிய உரைகள் எனப் பலப்பல உள. குறளுக்கு முன்பும் பின்பும் தோன்றிய ஏனைய நூல்களையும் அருகருகே வைத்துப் பார்த்தால்தான் குறளின் பரிமாணம் தெளிவுபெறும். அவ்வாறான தெளிவை நோக்கிய பயணத்தை மேற்கொண்டிருக்கும் இந்நூலாசிரியரை **'வள்ளுவச் சிக்கல்கள்'** என்ற தலைப்பிலமையும் நூல் வழியே அறிமுகம் செய்வதில் மகிழ்கின்றேன்.

பணிவுடன்
அ. அறிவுநம்பி

புதுச்சேரி
19.08.89

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

இவ்வையகத்துள் பிறந்த அனைத்து மனிதர்களும் நல்ல வண்ணம் வாழ்ந்து உயர்தற்குக் குறள் வழி வகுத்துள்ளது. வள்ளுவ அறநெறிப்படி வாழ நாம் கற்றுக் கொண்டால், மற்றையோர்க்கும் வழிகாட்டியாக விளங்க முடியும். இத்தகு சிறந்த வழிகாட்டி நூலாகத் திகழும் திருக்குறளில் சுட்டப்படும் நான்கு குறள்களை மட்டுமே மையமாகக் கொண்டு, இந்நூலினை உருவாக்கியுள்ளேன். இந் நூலாக்க முயற்சி என்னுடைய முதல் முயற்சியே. இந் நூலில் இருக்கும், நிறைகளை ஏற்றும் குறைகளைப் பொறுத்தும், சுட்டிக் காட்டியும், இந்நூலினை வர வேற்று ஆதரவு நல்குமாறும் பணிவுடன் வேண்டுகின்றேன்.

புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை மாணாக்கர்க்கும், ஆசிரியர்க்கும் எப்போதும், ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் எங்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மேதகு கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித் துள்ளார். அவர்க்கு என்னுடைய பணிவான நன்றியை உரித்தாக்குகிறேன்.

என்னைத் தமிழ் ஆய்வுலகிற்கு அறிமுகப்படுத்தி, இன்றும், என்றும் எனக்கு வேண்டிய உதவிகளைச் செய் தும் நெறிப்படுத்தியும் வரும், என் ஆசான் சென்னைப் பல்கலைக்கழக தமிழ்க் மொழித்துறை இணைப்பேராசிரி யர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் இந்நூலுக்கு முன்னுரை வழங்கி அணி செய்துள்ளார். அவர்க்கு நன்றி கூறப் பல்வகையிலும் கடமைப் பட்டுள்ளேன்.

'மாணாக்கர்களின் உயர்வுக்கு வழி கடுமையான உழைப்பு' எனும் தாரக மந்திரத்தை முழங்கி, புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை மாணாக்கர்க்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் பேராசிரியர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முனைவர் க. ப. அறவாணன் அவர்கட்கும் என் பணிவான நன்றியை உரித்தாக்குகிறேன்,

இந்நூல் முழுவடிவம் பெறுவதற்கு ஊக்கத்தை அளித்த, என் மேற்பார்வையாளர் முனைவர் அ. அறிவுநம்பி அவர்கள், இந்நூலுக்கு அறிமுகவுரை வழங்கி மேலும் சிறப்புச் செய்துள்ளார். அவர்க்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு, என் தாயைப் போல் எனக்கு அறிவுரை வழங்கி என்னை நெறிப்படுத்தி வரும், தாகூர் கலைக்கல்லூரி முதுகலை மையப் பேராசிரியர் முனைவர் சாரதா கலாவதி அவர் கட்கும் என் நன்றி.

தமிழியல் துறை அறிவரங்கக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரைகளே இந்நூலாக உருப்பெற்றுள்ளது, கட்டுரைகளில் ஏற்பட்ட ஐயங்களை வினாக்களாக எழுப்பியும், மேலும் பல கருத்துக்களை வழங்கியும், கட்டுரை யாவும் செம்மையுற வழிவகுத்த புதுவை வாழ் அறிஞர்கட்கும், தமிழியல்துறை மாணாக்கர்கட்கும் என் நன்றி.

திருக்குறள் தேசிய இலக்கியமாகுமா? எனும் தலைப் பில் இவ்வாண்டு, மார்ச்சு, ஏப்ரல் இரு திங்களிதழ்களிலும் தொடர் கட்டுரையாக வெளியிட்டு என்னை ஊக்கப் படுத்திய குறளிய திங்களிதழ் ஆசிரியர்க்கும் என் நன்றி உரியது.

சென்னையில், அச்சகப் பணி நிமித்தமாக வந்து தங்குவற்கு, உறையுள் வசதியினைச் செய்து உதவிய சென்னை சட்டக்கல்லூரி மகளிர் விடுதி உதவிக் காப்பாளர் செல்வி. மைதிலி அவர்கட்கும், செல்வியர் மாதவி, அமுதா அவர்கட்கும் என் நன்றி உரியது.

இந்நூலினைக் குறித்த காலத்தில் அச்சிட்டு உதவிய, ஸ்ரீ எஸ். எஸ். பிரிண்ட் ஹவுஸ் ஊழியர்கள் அனைவர்க்கும் என் நன்றி. விற்பனை உரிமையினை ஏற்றுக்கொண்ட ஐந்திணைப் பதிப்பகத்தார்க்கும் என் நன்றி உரியது.

புதுவை
2. 10. 89

அன்புடன்,
தி. தாமரைச்செல்வி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளுறை

1.	வள்ளுவத்தில் மூவர்...	1
2.	வள்ளுவத் தலைவிதியா... ஊழ் ?	15
3.	வள்ளுவத் தும்மல்	28
4.	கொழுநன் வழிபாடு...	46
5.	வள்ளுவம் : தேசிய நூல்	60
	துணைநூற் பட்டியல்	77

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்று

வள்ளுவத்தில் மூவர்

ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தப்புகுவது இன்பம் துய்ப்பதற்காக மட்டுமன்று. இல்வாழ்க்கையில் இருவரும் இணைந்து அறம் புரிவதற்காகவும்தான். அதனால்தான் வள்ளுவர் 'இல்லறவியல்' எனும் பகுதியை அறத்துப் பாலில் அமைத்துள்ளார். இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரும் பிறருக்குத் துணையாக வாழ்தல் வேண்டும் என்பது வள்ளுவரின் கருத்து. அதனை இல்வாழ்க்கையின் முதலிரு குறள்களில் எடுத்துரைக்கிறார்.

**''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை''** (41)

**''துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை''** (42)

இந்த இரு குறள்களில் மும்மூன்று வகையினர் குறிக்கப்படுகின்றனர். முதல் குறளில் சுட்டப்படும் 'இயல்புடைய மூவர்' என்போர் யார்? இரண்டாவது குறளில் சுட்டப்படும் துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்போரும் முதல் குறளில் சுட்டப்படும் இயல்புடைய மூவரும் ஒருவரா? வேறு வேறானவரா? என்பன போன்ற வினாக்கள் எழும்புவது இயல்பே. இதுபோன்ற வினாக்களுக்கு விடை கூற முயலுகிறது இக்கட்டுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்வாழ்க்கை விளக்கம்

இல்லறம் என்பதற்கு திரு.வி.க. பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

''இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தலே அறம். அதற்கு மாறுபட்டு வாழ்தல் மறம். ஒருத்தி ஒருவனுடனும், ஒருவன் ஒருத்தியுடனும் வாழ்வது இயற்கை அறமென்று இதுகாறும் சொல்லப்பட்டு வந்தது. இவ்வியற்கை அறத்தை உலகம் 'இல்லறம்' என்று சொல்கிறது. இல்லறம் என்பது அறக்கூறுகள் யாவும் சேர்ந்த ஒரு முழுமை என்க.

அறம் என்பது ஒரு மரம் போன்றது. திருமணம், பிள்ளைப் பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்புரவு, ஈகை, அருள், தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்வு முதலியன அம்மரத்தின் உறுப்புக்களாகிய வேர், மன்றம், பட்டை, கவடு, கோடு, விளார், தளிர், இலை, மலர், காய், கனி முதலியன போன்றன. இவ்வறக் கூறுகள் யாவும், பிறந்து வளர்ந்து பயனளிக்க வேண்டிய தாயகம் இல்லறமாகும். இந்நுட்பத்தை ஓர்ந்து தெளியின் அறத்துக்கும் இல்லறத்துக்கும் வேற்றுமை தோன்றாது'' 1

எனவே தான் வள்ளுவர் இல்வாழ்க்கையின் சிறப்பைப் பற்றிக் கூறுமிடத்து,

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' (49)

என்றும்,

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' (45)

என்றும் எடுத்துரைக்கிறார். இல்வாழ்க்கையில் ஈடுபடுவோர் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறநெறி வழுவாது இல்லறம் நடத்துதலே சிறப்பு. அவ்வாறு இல்லறம் நடத்தும்போது அவனுக்குரிய இல்லறக் கடமைகளாகச் சில வற்புறுத்தப்படுகின்றன. அவன் யார் யாருக்குத் துணையாக இருக்க வேண்டும் என்று முதலில் பட்டியலிடுகிறார். அதில் முதலில் இடம் பெறுவோர் இயல்புடைய மூவர், அடுத்து இடம் பெறுபவர் துறந்தோர், துவ்வாதார், இறந்தோர் என்போர். இவர்கள் யார் என்ற வினா எழுகிறது.

இயல்புடைய மூவர் யார்?

இயல்புடைய மூவர் என்பதற்கு பழைய உரையாசிரியர்கள் யாவரும் வடமொழி மரபைப் பின்பற்றியே பொருள் தருகின்றனர். பிரம்மச்சரியம் காப்போர், வனப்பிரத்த நிலையிலுள்ளோர், துறவியர் ஆகிய மூவர்க்கும் துணையாக இருப்பதே இல்வாழ்வான் கடமை ஆகும் என்பர். இவர்கள் கூறும் பொருள் வள்ளுவர் கருத்துக்கு உடன்பாடாகுமா என்பதைப் பின்வரும் கூற்றால் நோக்குவது சிறப்புடையதாகும்.

''இல்லறத்தையும், துறவறத்தையும் வள்ளுவர் ஏற்றுக் கொண்டார். மாணவநிலை (பிரம்மச்சரியம்) காடுறை வாழ்க்கை நிலை (வனப்பிரத்தம்) பற்றிய குறிப்பு எதுவும் பிற குறள்களில் இல்லை. காமத்துப் பாலும், தலைவர் தலைவியைக் காணும் நிலையில் தொடங்குகிறதேயன்றி, அதற்குமுன் தலைவன், மாணவ நிலையிலிருந்து கல்வியில் ஈடுபட்டிருந்தானா யாது செய்து கொண்டிருந்தனன் என்பதைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. தலைவன், திருமணத்திற்குரிய பருவம் வரை பிரம்மச்சரிய நிலையையேற்று ஓர் ஆசிரியர்பால் கல்வி கற்கும் கடப்பாட்டை மேற்கொண்டிருந்தானாகில் அவன் எப்பொழுது களவொழுக்கத்தை மேற் கொண்டான் என்ற கேள்வியெழ வாய்ப்புண்டு. பிரம்மச்சரியம் எனப்படும் மாணவ நிலையில் அவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களவொழுக்கத்தை மேற்கொள்ளல் பொருந்தாது. அவ்வாறு செய்யின் அது தவறும் ஆகும். ஆகவே, கல்வி கற்கும் வரையில் பிரம்மச்சரியம் ஒழுக்கங் காத்துக் கல்வி முற்றுப் பெற்று ஆசிரியர்பால் பயிலும் நிலை முடிந்த பின்பே களவொழுக்கத்தில் ஈடுபட்டு அதன்பின் மணம் புரிந்தான் என ஒருவாறு அமைத்துக் கொள்ளல் வேண்டும். களவின்பின் கற்பைக் கூறல் தொல்காப்பியர் காலத்தின் முன்னிருந்தே தமிழ் அகப்பொருள் நூல்களில் காணப்படும் மரபு. வாழ்க்கையின் நான்கு நிலைகள் என்பது வடமொழி நூல்களில் பயின்ற ஒரு கருத்தாகும். இரண்டையும் இணைப்பது சற்று இடர்ப்பாடுடையதே''[2].

இக்கூற்றிற்கிணங்க பரிமேலழகர் கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது. பிரம்மச்சரிய ஒழுக்கத்தானையும், வனப்பிரத்த நிலையினரையும் வள்ளுவர் பிறர் மதம் மேற்கொண்டு கூறினார் என்கிறார் பரிமேலழகர்.

மேற்சுட்டப்பெற்ற கருத்துக்களில், பிரம்மச்சரியம் காப்போரும் வனப்பிரத்த நிலையிலுள்ளோரும் இயல்புடைய மூவரில் அடங்கமாட்டார்கள் என்பது தெளிவு. எஞ்சி இருப்பவர் துறவியர்.

இயல்புடைய மூவரில் 'துறவியர்' என்பவர் ஒருவராகக் கொண்டால், இரண்டாவது குறளில் முதலில் சுட்டப்பெறும் துறந்தோர் என்போர் யார் என்ற வினா எழும்பும். இதற்கு விடை காணும்போது இடர்ப்பாடு தோன்றுவது இயல்பே.

இரண்டாவது குறளில் சுட்டப்படும் துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்போரே இயல்புடைய மூவர் என்று சுட்டுவர் ஒரு சில அறிஞர் பெருமக்கள். முதற் குறளில் 'மூவர்' என தொகை வகையாகக் குறித்த பின்னர், மீண்டும் அவர்களையே அடுத்தக் குறளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுவது வள்ளுவர்க்கு இயல்புமன்று. வழக்கமும் அன்று. அவ்வாறு கூறியிருப்பின் அது கூறியது கூறல் என்ற குற்றத்தின் பாற்படும். பொதுவில் இரு குறள்களும், மூவர்க்குத் துணையாதலைப் பற்றியே குறிப்பிடுகிறது. முதல் குறளில் சுட்டப்படும் இயல்புடைய மூவர் ஒரு வகையினர். இரண்டாம் குறளில் சுட்டப்படும் மூவர் என்போர் மற்றோர் வகையினர்.

இரண்டாவது குறளில் குறிப்பிடப்படும் துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்போர்க்குப் பின்வருமாறு பொருள் கொண்டால் அது பொருத்தமுடையதாக இருக்கும்.

துறந்தார் என்போர் இல்வாழ்க்கையிலிருந்து தன்னை முற்றும் துறந்து துறவு வாழ்க்கை மேற்கொள்பவர்கள்.

துவ்வாதார் என்போர், வறியவர் அல்லது ஏழைகளையும், கை, கால், கண் போன்ற உறுப்புக்களில் குறைபாடுடையார்களையும் குறிக்கும்.

இறந்தார்—இச்சொல்லுக்கு விளக்கம் கொடுக்க முற்படும் உரையாசிரியர்கள் மண்ணுலகை விட்டு உயிர் நீத்தவர்கள் என்று பொருள் கொண்டு, இறந்தோர்க்குரிய ஈமச்சடங்குகளை செய்யக் கூடிய கடமையுடையவன் இல்வாழ்வோனாவன் என்பர். இறந்தோர் என்ற சொல்லுக்கு இப்பொருளைக் கொண்டால்,

''தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' (43)

எனும் குறளில் சுட்டப்படும் 'தென்புலத்தார்' என்ற சொல்லுக்குப் பொருள் காணும்போது இடர்ப்பாடு தோன்றும். ஏற்கனவே, சுட்டியபடி, வள்ளுவர் எங்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னர்க் கூறியதைப் பின்னர் பெரும்பாலும் கூறமாட்டார் என்ற அடிப்படைச் செய்தி நினைவுகூரத் தக்கது. எனவே, 'இறந்தார்' என்பதற்கு தன்னைப் பேணுவாரின்றி அனாதையாகத் தவிக்கும் வறியவர் (வயது முதிர்ந்தவர்) என்று பொருள் கருதுதல் இயை புடையதாக இருக்கும்.

எனவே, வள்ளுவர் கருதும் துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்போர் முறையே துறவியர், வறியவர், அனாதை என்போரே ஆவர்.

துறவியர்க்கு வேண்டுவனவற்றை அளித்து, ஆதரித்து அவர்களைப் பேணுதல் என்பது இல்வாழ்வானின் கடமை களுள் ஒன்று.

> **''இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த**
> **நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே''** 3

எனப் புறநானூற்றில் துறவோரை வரவேற்று உபசரித்து வணங்குமாறு கவிஞர்கள் அரசர்க்கு அறிவுரை கூறு கின்றனர்.

சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங் களும், துறவியரை வரவேற்று, உணவளித்துப் போற்றுதலை ஒரு சிறந்த அறமாகக் கொண்டு போற்று கின்றன.

> **''அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்**
> **துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்தெதிர்க் கோடலும் இழந்த என்னை''** 4

எனச் சிலப்பதிகார வரிகள் தெளிவாகச் சுட்டும்.

''மணிமேகலையுள்ளும், அக்காவியத் தலைவி சென்ற பிறவியில் சாதுசக்கரன் என்னும் துறவியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரவேற்று உணவளித்துப் பின் இறக்கும்போதும் அச் செயலை நினைந்த நல்வினையின் பயனாகவே இப்பிறவியில் பலருக்கு உணவளிக்கத்தக்கதாக அமுத சுரபியைப் பெற்றாள் எனக் கூறப்படுகிறது.''

இச்சான்றுகளை நோக்கும்போது, துறவோர்க்குத் துணையாதலைச் சங்கப் பாடல்களும், இரட்டைக் காப்பியங்களும் மரபாகப் போற்றின என்பது புலனாம். இக்கருத்தினை ஒட்டியே வள்ளுவர் துறவோர்க்குத் துணையாதல் இல்வாழ்வாரின் கடமை என அறிவுறுத்துகிறார்.

இல்வாழ்வானுக்குரிய கடமைகள்

மூன்றாவது குறளில் இல்வாழ்வானுக்குரிய கடமைகளாக ஐவகைக் கடமைகள் சுட்டப்படுகின்றன.

''தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' *(43)*

இதில் சுட்டப்படும் தென்புலத்தார் என்போர் 'முன்னோர்கள்' என்ற பொருளைக் குறிக்கும். தன் குடும்பத்தில் பிறந்து வாழ்ந்த முன்னோர்க்கு நீர்க்கடன் செய்வது இல்வாழ்க்கையில் ஈடுபட்டோனுடைய முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.

'தெய்வம்' என்பது, நம்மிடையே வாழ்ந்துமறைந்த முன்னோர்களைத் தெய்வமாக வழிபடல் மரபாகும். இன்றும், 'அமாவாசை' என்ற நாளினை இறந்த முன்னோர்க்குப் படைக்கும் படையலாக கருதுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. வள்ளுவர் கருதும் 'தெய்வம்' என்பது இறந்தமுன்னோர்களையே குறிக்கும். அவர்களை வழிபடுதல் அல்லது வணங்குதல் என்பது இல்வாழ்வானுடைய முக்கியக் கடமையாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில் இல்வாழ்க்கையில் இறுதியாக இடம் பெற்றுள்ள குறள் நோக்கத்தக்கது.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

இல்வாழ்க்கைத் தர்மத்தை அறநெறி வழுவாமல், இவ்வையத்துள் வாழ்ந்து ஒழுகுபவனே. அவன் கீழ்வரும் தலைமுறையினரால் வழிபடும் தெய்வமாக, உயர்ந்தோனாக கருதப்படுவான் என்பதே இதன் பொருள். அத்தகைய சிறந்த உயர்ந்தோரை நினைவு கூர்ந்து, வணங்குதலே இல்வாழ்வானுடைய கடமையாகும்.

அடுத்து இடம்பெறுவது விருந்து. தமிழ் மரபில் விருந்து என்பது 'புதியவர்' என்பதைக் குறிக்கும். இல்வாழ்வானை நோக்கி யாரேனும் முன் பின் அறிமுகமில்லா புதியவர் வருவாரேயாகில் அவரை வரவேற்று உபசரித்தல் சிறந்த கடமையாகும். இக்கடமையிலிருந்து இல்வாழ்வோன் வழுவக் கூடாது. இதனால்தான் வள்ளுவர் 'விருந்தோம்பல்' எனும் தனி அதிகாரம் வகுத்து அதில் விருந்தோம்பலின் சிறப்பை எடுத்தியம்புகிறார்.

ஒக்கல் என்பது சுற்றத்தினரைக் குறிக்கும். சுற்றத்தினரின் மனம் நோகும்படி நடந்துகொள்ளாமல் அவர்களையும் மகிழ்ச்சிப்படுத்தும் அளவிற்குச் சிறப்பாக உபசரிப்பது இல்வாழ்வானின் கடமையாகும்.

அடுத்துவரும் 'தான்' என்பது தன்னையும் தன் குடும்பத்தையும் குறிக்கும். இல்வாழ்க்கையில் ஈடுபட்டோன் அறநெறி வாழ்வில் நிலைத்து தூய்மையுடையவனாக இருத்தல்வேண்டும். அவன் கள்ளுண்ணாமலும், சூதாடாமலும், பிற தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமலும் இருத்தல் அவசியம். தான் நோய் நொடியில்லாமல் வாழ்ந்தால் தான் பிறருக்குத் துணையாக வாழமுடியும். அவ்வாறு வாழாமல் தீயபழக்கங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்கு அடிமையாக வாழ்வானேயானால் இவனுக்கு மற்றவர்கள் துணையாக ஆகவேண்டிய நிலை உருவாகும். இவன் தூய்மையுடையவனாக, அன்புடையவனாக, அருள்நெறி உடையவனாகவும் இருந்தால்தான் இல்வாழ்க்கை தூய்மையுடையதாக விளங்கும். இதனால்தான், இல்வாழ்வானுக்குரிய ஐந்து கடமைகளுள் 'தான்' என்பதனையும் சேர்த்துக் கூறுகிறார்.

இக்கருத்துக்கள் அனைத்தையும் நோக்கும்போது, வள்ளுவர் கருதும் இயல்புடைய மூவர் என்பது யார் என்ற வினாவே எஞ்சி நிற்கிறது. அவர்கள், பெற்றோர், மனைவி, மக்கள் என்போரே ஆவர். இக்கருத்தே பொருத்தமுடையதாக இருக்கும். இவர்கள் மூவரைப் பற்றியும் முற்சுட்டப்பெற்ற குறள்களில் எங்கும் சுட்ட வில்லை. எனவே, வள்ளுவர் கருதும் இயல்புடைய மூவர் என்போர் பெற்றோர், மனைவி, மக்கள் என்ற மூவரே ஆவர்.

ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொண்டு இல்வாழ்க்கை நடத்தப் புகுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைபவர்கள் பெற்றோர்களே ஆவர். அவர்களைப் பேணாமல், அவர்களுக்குத் துணையாக இல்லாமல் இல்வாழ்க்கை நடத்துவது என்பது சிறப்புடையதாகாது. இக்கருத்திற்குப் பின்வரும் சிலப்பதிகாரக் காப்பிய வரிகள் சான்று பகரும்.

"அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது

தன்றி தில்ளெனத் தளர்ச்சி நீங்கி
என்தீ தென்றே எய்திய துணர்ந்தாங்
கெற்பயந் தோற்கம் மண்ணுடை முடங்கல்
பொற்புடைத் தாகப் பொருளுரை பொருந்தியது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாசில் குரவர் மலரடி தொழுதேன்
கோசிக மாணி காட்டெனக் கொடுத்து'' 6

இப்பாடல் வரிகள் மாதவியை விட்டுப் பிரிந்த கண்ணகியுடன் மீண்டும் வாழத் தொடங்கிய கோவலனுக்கு மாதவி வரையும் மடல் பற்றிக் குறிப்பிடுகிறது. அடிகள் நான் நும் திருவடிகளைத் திசைநோக்கி வணங்குகிறேன். நான் கூறிய தெளிவில்லாத புன்மொழிகளை எல்லாம் உள்ளத்தில் நினைத்தல் வேண்டாம். எனது நட்பினால், தாங்கள் இருமுதுகுரவர்க்கு ஏவல் செய்யும் பணியில் பிழை செய்தீர் என்கிறாள். மாதவியின் மடலைப் படித்த கோவலனும், அவள்மீது தவறு இல்லை என்று உணர்ந்து அக்கடிதத்தை, கோசிகனிடம் கொடுத்து இதனை என் இருமுதுகுரவரிடம் காட்டுவாயாக எனப் பணிக்கிறான் என்ற குறிப்பு கிடைக்கிறது.

இக்குறிப்பிலிருந்து இல்வாழ்க்கையில் ஈடுபடுவோர் பெற்றோரைப் பேணுதல் எவ்வளவு இன்றியமையாததெனப் புலப்படும். பெற்றோருக்குத் துணையாக வேண்டும் என்று குறிப்பிடுவதால், கணவன், மனைவி நடத்தும் வாழ்க்கை கூட்டுக் குடும்ப வாழ்க்கை ஆகும் என்று கருதுதல் பிழையுடையதாகும். வேறு இல்லத்தில் பெற்றோர் வாழ்ந்தாலும், அவர்களை அடிக்கடி சென்று கண்டு வரவேண்டும். அவர்க்கு வேண்டும்போது துணையுடன் இருந்தும் அவர்கள் நோயுற்றபோது அவர்கட்கு வேண்டிய உதவிகளை செய்வதில் கடமை தவறக்கூடாது என்று வற்புறுத்தவே இயல்புடைய மூவரில் முதலில் 'பெற்றோர்' இடம் பெறுகின்றனர்.

இல்வாழ்வோன் என்று ஆண்பால் விகுதிபெற்று கூறப்படுவதால் இல்லற நெறிக்குரியவன் ஆடவன் என்றாலும், அவனுடன் அனைத்து நிகழ்ச்சிகளிலும் சமபங்கு வகிக்கக் கூடியவள் மனைவியே, இல்வாழ்வான் என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறினால், அவனுடைய உள்ளடக்கமாகக்கருதப்படுபவள் மனைவியே, எனவே அவளைப் பேணிப் பாதுகாத்தல் இல்வாழ்வோனுடைய கடமையாகச் சுட்டப்படுகிறது. அன்றியும், இவ்விடத்தில் தமிழர்க்குரிய மரபு ஒன்று நோக்கத்தக்கது.

விருந்தோம்பல் எனும் இல்லற கடமையை ஆற்றும் போது கணவன், மனைவி இருவரும் உடனிருந்து ஆற்றுதலே மரபாகும். அதனைப் பின்வரும் சிலப்பதிகாரக் கொலைக்களக் காதை வரிகள் தெளிவுறுத்தும். இக்காதையிற் கண்ணகி கோவலனைப் பிரிந்து வருந்தும்போது,

'அறவோர்க் களித்தலும், அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'

என்றுதான் வருந்துகிறாள். கணவனைப் பிரிந்தால் எப்படி விருந்தினரை வரவேற்று உபசரித்து ஓம்ப முடியும் என்று வருந்துகிறாள்.

இதேபோன்று, இராமனைப் பிரிந்து வாழும் சீதையின் நிலையும் இங்கு நோக்கத்தக்கது.

''அருந்தும் மெல்அடகு ஆர்இட அருந்தும் என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்உறுமோ என்று விம்மும்'',[7]

என்னைப் பிரிந்து வாழும் இராமன், விருந்தினர் வரும் போது உபசரிப்பவர் யார் என்று வருந்துவாரோ என்று வருந்துகிறாள் சீதை.

சங்கஇலக்கிய அகப்பாடல்களும் இதற்குச் சான்றாக நிற்கின்றன. ஊடல் பற்றிய செய்திகள் இடம் பெறும் பாடல் வரிகளில் தலைவனும், தலைவியும் ஒருவருடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருவர் ஊடிக்கொண்டு பேசாதிருக்கும்போது விருந்தினர் யாரேனும் வந்துவிட்டால் அவ்விருந்தினர் பொருட்டு, அவர்கள் ஊடல் தீர்ந்ததாகப் பல பாடல்கள் சான்று பகர்கின்றன.

எனவே, மேற்கூறிய இலக்கியச் சான்றுகளை நோக்கும் போது கணவன், மனைவி இருவரும் ஒன்றாக இணைந்து தான் சில கடமைகளை ஆற்ற முடியும். அதிலும், குறிப் பாக விருந்தோம்பல் இருவரும் சேர்ந்து ஆற்ற வேண்டிய கடமை என்பது புலனாகிறது.

'இல்வாழ்வான்' என்று கூறுவதற்கு மேலும் சில சான்றுகளைக் காண்பது சிறப்புடைத்து.

இல்லறக் கடமை ஐந்தனுள், தென்புலத்தோர்க்குச் செய்யும் 'ஈமக்கடன்' என்பது ஆடவனால் மட்டுமே செய்யக் கூடியது. அதனை மகளிர் செய்வது என்பது மரபன்று.

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்டிர், தன் கணவனைத் தவிரப் பிற தெய்வங்களை வழிபடும் இயல் புடையவள் அல்லள். இதனைப் பின்வரும் குறட்கருத்து சான்று பகரும்.

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்''

என்ற வரியே மேற்சுட்டப் பெற்ற கருத்துக்கு அரண் சேர்க்கிறது. இதற்கு மேலும் வலுவூட்டும் வகையில் சிந்தாமணிப் பாடல் வரிகளும் சான்று பகருகின்றன.

''சாமெனிற் சாத னோத றன்னவன் றணந்த காலைப்
பூமணம் புனைத லின்றிப் பொற்புடன் புலக வைகிக்
காமனை யென்றுஞ் சொல்லார் **கணவற்கை தொழுது
வாழ்வார்**
தேமலர்த் திருவோ டொப்பர் சேர்ந்தவன்
செல்லறீர்ப்பார்''[8]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த இரண்டு காரணங்களாலும்தான் வள்ளுவர் 'இல்வாழ்வான்' என்று குறிப்பிடுகிறார். இருந்தாலும், இல்லற தர்மம் என்பது இருபாலார்க்கும் பொதுவுடைய தாகவே கருதப்படுகிறது. எனவேதான், இல்லற தர்மத் தில் ஈடுபடக்கூடிய மனைவியைத் 'துணை' என்று அழைக் கிறார். இல்வாழ்வில் ஈடுபடும் ஆடவரும், பெண்டிரும் ஒருவர்க்கொருவர் துணையாக வாழ்தல்தான் சிறப் புடைத்து. அதனால்தான் இயல்புடையமூவரில் இரண்டா வதாக மனைவிக்குத் துணையாகக் கணவன்திகழவேண்டும் என்கிறார்.

அடுத்து, மக்கட்பேறு, சிறந்த இல்வாழ்க்கை அமைய வேண்டுமானால், மக்கட்பேறு அவசியமாகிறது. இதனை,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

என்ற குறட்கருத்து சிறப்பிக்கும். எனவே, இல்வாழ்வோ னுடைய கடமைகள் மக்கட்பேற்றைக் காத்தலும், அதற்குத் துணையாதலும் நன்றாக வற்புறுத்தப்படு கிறது.

மேற்கண்ட விளக்கங்களால் வள்ளுவர் கருதும் இயல் புடைய மூவர் என்பவர் பெற்றோர், மனைவி, மக்கள் என்பவரேயாவார்.

பெறப்பட்ட செய்திகள்

1. 'இயல்புடைய மூவர்' எனும் தொடர் பழைய உரையாசிரியர்கள் குறிப்பிடுவது போன்று, பிரம்மச்சரி யம் காப்போர், வனப்பிரத்த நிலையிலுள்ளோர், துறவியர் என்பதைக் குறிக்காது.

2. துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்பன, இயல்புடைய மூவரைக் குறிக்காது. இவைகள் முறையே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறவியர், வறியர், அனாதைகள் என்போரையே சுட்டி நின்றன.

3. இல்வாழ்வானுக்குரிய ஐந்துகடமைகளுள் இறந்த முன்னோர்க்கு ஈமக்கடன் செய்தலும், அவர்களை வழிபடு தெய்வமாக வணங்குதலும் கடமையாக வற்புறுத்தப் படுகின்றன.

4. 'விருந்தோம்பல்' பண்பு என்பது இல்லறத்தில் ஈடுபடும் ஆணும், பெண்ணும் சேர்ந்து ஆற்றும் ஒரு பணியாகும்.

5. வள்ளுவர் கூறும் இயல்புடைய மூவர் என்போர், பெற்றோர், மனைவி, மக்களே ஆவர்.

குறிப்புகள்

1. திரு.வி.க.: பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை—ப-203.
2. காமாட்சி சினிவாசன், குறள் கூறும் சமுதாயம், ப-57-58.
3. புறநானூறு—6; 19-20.
4. சிலப்பதிகாரம், கொலைக்களக் காதை—71-73.
5. காமாட்சி சினுவாசன், மேலது, ப-60.
6. சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்த காதை—87-103.
7. கம்பராமாயணம், சுந்தரகாண்டம்—343.
8. சீவகசிந்தாமணி—1598.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டு

வள்ளுவத் தலைவிதியா... ஊழ்?

ஊழ் என்ற சொல்லைப் பற்றித் தமிழறிஞர்களிடையே பலவகையான, கருத்து வேறுபாடுகள் உள்ளன. வள்ளுவர் கூறும் 'ஊழ்' சமய அறிஞர்கள் போற்றும் விதியா அல்லது இயற்கையாக நிகழும் நிகழ்ச்சியா என்பதே சிக்கல். இச்சிக்கலை விடுவிக்க முயலுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஊழ் எனும் சொல்லிற்குப் பழமை, பழவினை, பழவினைப் பயன், முறைமை, குணம், பல்லூழ், முதிர்வு, முடிவு, பகை, சூரியன் என்று விளக்கம் கூறுகிறது, தமிழ்ப் பேரகராதி (Lexicon). இதில் ஊழ் என்பதற்குத் 'தலைவிதி' என்ற பொருள் குறிப்பிடப்படவில்லை. பழவினை என்பது தலைவிதிக்கு ஒப்பானது எனக்கொள்ளினும், குறள் கூறும் ஊழ் விதியைக் குறிக்காது பிற பொருள்களில் ஒன்றைச் சுட்டுவதாகக் கொள்ள இடமுண்டு.

தமிழ் நூற்களில் பழமையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில்,

> **"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
> **ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்**
> **ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப"**[1]

எனும் நூற்பாவில், இடம்பெறும் 'பாலது ஆணை' என்பதனை 'ஊழ்வினை' என்று உரை கூறுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சான்றாக, ''காதலிற் சிறந்த ஓர் ஆண்மகனையும், ஒரு பெண்மகளையும் ஒருங்குதலைப் பெய்வித்தற்கு ஒரு துணைக்கருவியாய் இருந்துதவுவது ஊழ்வினையேயாம்'', என்றுரைப்பர் மறைமலையடிகள். தொல்காப்பியர் 'பாலது ஆணை' என்ற சொல்லினை ஊழ்வினை என்ற பொருளில் கையாண்டிருப்பாரா என்பது ஐயமே. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வது இயற்கையாக நிகழ்வதுதானே அன்றி, ஊழ் வினைப் பயன் அன்று. பிற்காலத்தில் எழுந்த உரையா சிரியர்கள், அவர்கள் காலச் சமயச் சூழலுக்கேற்றவாறு பொருளை ஏற்றிக் கூறியுள்ளனர்.

சங்க இலக்கியங்களில் 'ஊழ்' எனும் சொல் முறை, முதிர்வு, மலர்தல், மலர்ந்து உதிர்தல், ஊழிக்காலம் (நெடுங்காலம்) வாழ்நாள் எனும் பொருள்களில் சுட்டப் படுகிறது. இங்கு 'ஊழ்' என்பது விதி எனும் பொருளில் எவ்விடத்தும் சுட்டப் பெறவில்லை என்பது நோக்கத் தக்கது.

திருக்குறளுக்கு முன் எழுந்த தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் ஊழ் எனும் சொல் 'தலைவிதி' எனும் பொருளில் சுட்டப்படவில்லை என்பது தெளிவா கிறது. திருக்குறளில் சுட்டப்பெறும் 'ஊழ்' என்பது விதியைக் குறிக்காது. இயற்கை நியதியைதான் குறிக்கும். 'வினை' என்ற பின்னொட்டுடன் குறளில் 'ஊழ்வினை' என்ற சொல் எங்கும் இடம் பெறவில்லை என்பதும் குறிக்கத்தக்கது.

குறளுக்குப் பின்னால் எழுந்த சமண, பௌத்தக் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையி லும் தான் 'ஊழ்வினை' என்ற சொல் குறிக்கப் பெறு கிறது ஊழ் என்பது இயற்கை நியதி எனும் பொருளிலும், வினை எனும் சொல் 'செயல்' எனும் பொருளிலும் சுட்டப்பெற்று பின்னர் அவ்விரண்டும் சேர்ந்து, இயற்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நியதி வழியிலான செயல்பாடு என்பதைச் சுட்ட ஊழ்வினை ஆயிற்று எனல் பொருந்தும். இயற்கையாக நிகழக் கூடியதற்கு, சமண பௌத்த சமயவாதிகளால் தத்துவ விளக்கம் கூறப்பெற்று பின்னர் அது விதிக் கொள்கையாக உருவாகி இருக்கலாம். ''அறம் அளவு கடந்து வற்புறுத்தப்பட்ட சூழலில் கடவுளுக்கு அதிக முக்கியத்துவம் காணப்படவில்லை. நல்வினை, தீவினை என்பன உயிருக்கு எவ்வாறு பயன் தரும் என்பது ஒரு வினா. அதற்கு விடையாக, ஊழின் வலிமை கூறப்படுகிறபோதிலும், சமணம், பௌத்தம், ஆசிவகம் முதலிய சமயங்களிலேயே அது அதிக முக்கியத்துவம் பெறுகிறது''[3] என்பார் கூற்றும் ''கருமக் கொள்கை'' வேதங்களிலேயே கூறப்பட்டுள்ளன என்பர். 'ரித' என்ற கொள்கையே பின்னர் கருமக் கொள்கையாக வளர்ந்தது என்பர். அதன் பயனாக, எல்லா நிகழ்ச்சிகளும், காரண, காரிய ஒழுங்கிற்கு உட்படுவன. காரணமின்றி எச்செயலும் நிகழாது என்ற கருத்து வலிவு பெற்றது. அக்கருத்து அறஉலகிலும் இடம் பெற்றது. அதனால் அவரவர்க்குரிய நன்மை தீமைகளை மக்கள் அனுபவிப்பர் என்ற கருத்து சமுதாயத்தில் நிலை பெற்றது எனலாம். அதன் உணர்ச்சியே விதிக் கொள்கை (அ) ஊழ் ஆகும்''[4] என்பார் கூற்றும் நினைவு கூரத்தக்கன. இக்கருத்துக்கள் சமண, பௌத்த சமயக் கொள்கையின் தாக்கத்தினால் ஏற்பட்டவிளைவு என்பது பெறப்படும்.

சிலப்பதிகாரம் எழுதுவதற்குக் காரணமாகச் சுட்டப்படும் மூன்று கருத்துக்களில் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது மையக் கருத்தாகும். சிலப்பதிகாரக் காலத்தில்தான் இக்கொள்கை வலிமை பெற்று இருக்க வேண்டும். வள்ளுவர் காலத்தில் இக்கொள்கை நிலவி இருக்கும். ஆனால், இவ்வளவு வலிமையுடையதாக

வ.—2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்திருக்குமா என்பது ஐயமே. ஏனெனில் ஊழ் என்பதைத் தலைவிதியாகக் குறித்துக் காட்டவில்லை திருக்குறள்.

ஊழ்-உரையாசிரியர்கள் விளக்கம்

ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட்கிளவி. இருவினைப் பயன். செய்தவனையே சென்று அடைதற்கான ஏதுவான நியதி. விதி என்பது ஒரு பொருட் கிளவி. இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவான நியதி. முற்பிறப்பின் வினைப் பயனைச் சொல்லியது என்ற கருத்தை அடியொற்றி, பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், நாமக்கல் கவிஞர் முதலிய உரையாசிரியர்கள் உரைப்பர்.

வள்ளுவர் தம் ஊழ்க் கொள்கை, முற்பிறப்புக் குறிப்போ, பழவினைக் குறிப்போ, அவ்வுலகக் குறிப்போ, தினை அளவும் அற்றது. ஊழ் முறை அதாவது உலகமுறை (அ) உலகச் சூழல் என்று கூறுவர் வ. சுப. மாணிக்கனார்.

ஊழ் என்பது உலகியல் முறைமை என்றே புலவர் குழந்தை, மு.வரதராசனார் போன்ற அறிஞர் பெருமக்கள் முறையே, திருக்குறள் உரையிலும், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்ற நூலிலும் சுட்டிச் செல்லுகின்றனர்.

மக்களின் எண்ணம், குறியீடு முதலியவற்றுள் அடங்காமல் அவற்றிற்கு அப்பாற்பட்டு இயற்கையாக நிகழும் முறைமையே 'ஊழ்' எனப்படும் என்பர் கு. ச. ஆனந்தனார்.

இக்கருத்துக்களை ஆராய்ந்து நோக்குவோமானால் ஊழ் என்பது இயற்கை நியதி என்று பெறப்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பழைய உரையாசிரியர்கள் கூறும் கருத்துக்கள் யாவும் சமய நெறி பூசப்பெற்று, அவர்களுடைய காலச் சூழலுக்கேற்றவாறு பொருள் எழுதியுள்ளனர். 'ஊழ் என்பது விதி' இதுவே பழைய உரையாசிரியர்களின் விளக்கம். குறளாசான் உள்ளக்கிடக்கை இஃதே எனக் கொள்ள இயலவில்லை.

''விதி என்பது சட்டம் (அ) ஆணை என்று பொருள் படும். இவ்வாணையானது யாராலும் மாற்றவோ, அழிக்கவோ, எதிர்க்கவோ முடியாது. ஊழ் என்பது இயற்கை நியதி. இடத்தாலும், சமூகத்தாலும் சுற்றுச் சூழல்களாலும், மக்கள் கூட்டத்தாலும், அரசாலும், கருவிகளாலும், தொழிலாலும் உலகத்து இயற்கை தோன்றுகிறது''[5] என்பர் கு. ச. ஆனந்தனார். இக் கருத்துக்கு மேலும் அரண் சேர்க்கும் வகையில், பரிமேலழ கர் ஊழ் தோன்றுவதற்கான கருவிகள் பற்றிக் கூறும் போது, நல்லவை, தீயவை என்பன, காலமும், இடமும், கருவியும், தொழிலும் முதலியவை என்கிறார். இவ்விடத்தில் பரிமேலழகர் கருத்தைக் கூர்ந்து நோக்கும் போது வள்ளுவர் கூறும் ஊழ் 'உலகத்து இயற்கை' என்பது பெறப்படுகிறது.

ஊழ் என்ற சொல் மாற்ற முடியாத விதியைக் குறிக்குமானால், வள்ளுவர்,

> **''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
> **தாழாது உஞற்று பவர்''** (620)

என்று எழுதியிருக்க முடியாது. இந்த ஊழை வெல்லக் கூடிய ஒரு சக்தி இருக்குமேயானால் அதுதான் இடை விடாது செய்யும் முயற்சி ஆகும் என்கிறார். இயற்கை நியதி என்பதினால்தான் உன்னுடைய கடும் முயற் சியினால் அவ்வூழை மாற்றமுடியும் என்கிறார். அதுவே, சமயத்தார் கூறும் விதியாக இருந்தால் மாற்ற முடியாது. மற்றொரு இடத்தில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்'' (619)

என்கிறார். அக்கால மக்கள் நம்பிய தெய்வம் என்ற சொல்லைக் கூறி, நீங்கள் முழு மனத்துடன் நம்பக்கூடிய தெய்வத்தால் ஆகாத சில காரியங்கள் கூட உங்கள் முயற்சியின் முன் தோற்றுப் போகும் என்கிறார். ''தெய்வம் என்ற ஒன்று எல்லாம் தரும்; தெய்வத்தால் ஆகாதது எதுவும் இல்லை என்ற ஆழ்ந்த நம்பிக்கை அந்தந்தக் குலங்களைச் சார்ந்த மக்களிடம் இருந்து வந்தது என்ற அற்றைய நடைமுறை நிலையைச் சுட்டி, தனது அறக் கருத்துக்கு வலிவூட்டுவதற்கான முயற்சியை முதன்மைப் படுத்துகிறார்.''[6] இதனால், கடவுள், கடவுளைச் சார்த்திக் கூறப்பெற்ற ஊழ் இவற்றிலிருந்து வள்ளுவம் வேறுபட்டு நிற்பது தெளிவுபடும்.

ஒருவன் தான் செய்கின்ற வினைக்கேற்றவாறு பலனை அடைகின்றான். அவன் நன்மை செய்தால் நன்மையையும், தீமை செய்தால் தீமையையும் அடைவான். ''வினை விதைத்தவன் வினையை அறுப்பான், தினை விதைத்தவன் தினையை அறுப்பான்,'' 'தன்வினை தன்னைச் சுடும்' எனும் தமிழர் நம்பிக்கைகள் இதனை மெய்ப்பிக்கும். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு வள்ளுவர் ஓரிடத்தில்,

''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்'' (319)

என்கிறார். இதில் கூறப்படும் முற்பகல் பிற்பகல் எனும் சொற்கள், நீ இப்போது ஒருவனுக்கு தீமை செய்தாயே யானால், அத்தீமையின் விளைவை நீ இப்பிறப்பிலேயே அனுபவிப்பாய் என்பது வள்ளுவம். வாழ்க்கையின் இறுதிக் கட்டத்திலாவது அத்தீமை தொடர்ந்து வந்து உனக்குத் துன்பம் கொடுக்கும். எனவேதான், செய்வன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாவும், நற்செயற்களாகவே இருக்கட்டும் என்பதை வற்புறுத்துகிறார். நன்மைக்கு நன்மை நடக்கும். தீமைக்குத் தீமையே விளையும் என்பதுதான் வள்ளுவர் கருத்தாகுமேயன்றி, முற்பிறவி நன்மைக்கே, இப்பிறவியில் நன்மை என்பது அவர்தம் கருத்தாகாது.

ஊழ் எனும் அதிகாரத்தில் முதல் குறளாக வரும்

> "ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
> போகூழாற் றோன்று மடி" (371)

7894

என்பது. நல்வினை என்பது ஆகூழையும், தீவினை என்பது போகூழையும் குறிக்கும். இங்கு வினை என்று கூறுவது செயலையே குறிக்கும். நற்செயல்கள் செய்தோமானால் அதற்கேற்ற பலனை அனுபவிக்க வேண்டும். நற் செய்கையின் காரணமாகத் தோன்றும் ஆகூழினால் ஒருவனுக்கு முயற்சி தோன்றும். முயற்சியினால் செல்வம் சேரும் என்றும், தீச்செய்கையின் காரணமாக தோன்றும் போகூழினால் ஒருவனுக்குச் சோம்பல் தோன்றும். இச்சோம்பலினால் அவனிடம் இருக்கும் செல்வம் நீங்கும் என்றும் விளக்குகிறார். ஒருவனது நன்மை தீமைகளுக்குக் காரணமாக அமைவது அவனது செயலே ஆகும். 'வினைப்பயன்' என்று சுட்டப்படுவது யாவும் 'செயலின்பயன்' என்பதைத்தான் சுட்டும். இந்த செயலின் பயனே, பின்னர் காலச்சூழலுக்கேற்றவாறு 'பிறவிப் பயன்' என்று மாற்றப்பட்டது எனலாம். இவ் வினையைச் சிலம்பாசிரியர், சமயத்தாரின் தலைவிதி யோடு இணைத்து ஊழ்வினை என்றாரெனக் கொள்ள முடிகிறது.

வள்ளுவர் சோம்பித் திரிபவர்களை வெறுப்பவர். அதனால்தான் ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினை யுடைமை எனும் அதிகாரங்களை வகுத்து அதில் மனிதனுக்கு முயற்சி இன்றியமையாதது என்றுவற்புறுத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறார். இதனை வலியுறுத்தத்தான் 'ஊழ்' எனும் அதிகாரத்தை அமைத்து, அதன் சிறப்பை விளக்கிக் கூறி 'ஊழிற் பெருவலி யாஉள?' என்று வினவுகிறார். இயற்கை நியதியின் சிறப்பை இவ்வாறு எடுத்துரைக்கும் முதுநூலார் அத்தகைய வலிமைமிகு ஊழினை வெல்லக் கூடிய வழிமுறைகளையும், கூறிச் செல்கிறார்.

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'' (620)

''தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்'' (619)

என்கிறார். இதில் 'உலைவின்றித் தாழாது உஞற்று பவர்', 'முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்ற குறள் வரிகளின் மூலம் முயற்சியை வற்புறுத்துகிறார். விதிக் கொள்கையில் நம்பிக்கை உடையவராக இருந்தால் இது போன்ற கருத்தமைந்த குறள்களை எழுதும் அவசியம் ஏற்பட்டிருக்காது. மேலும் அவரே,

'வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்' (651)

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' (666)

'வேண்டிய வேண்டியாங்கு எய்தல்' (265)
'முயற்சி திருவினை யாக்கும்' (616)

என்ற குறள் கருத்துக்களைக் கூறி இருக்க வேண்டியதும் இல்லை. ஊழினுடைய வலிமையை விளக்கிய குறளாசிரியர், அவ்வூழினைக் காரணங்காட்டி யாரும் சோம்பி இருக்கக் கூடாது என்பதை வற்புறுத்துகிறார். தட்டில் உணவை வைத்துக் கொண்டு கைகட்டி உட்கார்ந்து வாய்க்குச் செல் என்றால் சென்று விடுமா? செல்லாது. அதைப் போன்றே நிலத்தை வைத்துக்கொண்டு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயிரிடப் பொருள் இல்லையே என்று வருந்துபவனின் நிலையைப் பார்த்து,

'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'' (1040)

என்கிறார். சோம்பித் திரியும் மக்களைப் பார்த்துத்தான் இவ்வாறு கூறுகிறார். இதனை வலியுறுத்தவே, இரவச்சம் எனும் அதிகாரத்தில்,

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்'' (1062)

என்கிறார். எந்த வேலையும் செய்யாமல் (முயற்சி அல்லது உழைப்பு) பிறரிடம் கையேந்தி இரந்து வாழ்கின்ற வாழ்க்கையை மேற்கொள்கின்றனர் மனிதர்கள். உழைப்பின் திறனை, அறியாது வாழும் மனிதர்கள் நிறைந்த இவ்வுலகத்தைப் படைத்தவன் கெட்டு ஒழிந்து போக என்று சபிக்கிறார். வள்ளுவர்க்கு விதிக் கொள்கையில் நம்பிக்கை இருக்குமானால், எல்லாச் செயல்களும் அவனுடைய விதிப்படிதான் நடக்கும் என்று விட்டுச் சென்றிருக்கலாம். ஆனால், அவர் அவ்வாறு செய்யாமல் மனிதர்களைத் திருத்துவதற்கு முயற்சி செய்கிறார். மேலும் விதிக்குக் காரணமாய கடவுளைச் சாடவும் முடிகிறது. இல்லையேல், எல்லாம் அவன் செயல் என்று பாடியிருப்பார்.

அறிவு நூல்கள் பல கற்பதால் மட்டும், செல்வம் சேர்ந்து விடாது. செல்வம் அறிவில்லாதவரிடத்து இருப்பதையும், அறிவுடையார், வறியவராய் இருப்பதையும் காணும்போது, அறிவால்தான் செல்வத்தைத் தேட முடியும் என்பதைவிட முயற்சியால்தான் முடியும் என்பதை வற்புறுத்துகிறார். அறிவுடையார் செல்வத்தை இழந்து வாடுவதையும் பொருள் கோடி சேர்த்தோர் அதனைத் துய்க்க முடியாமல், வருந்துவதையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளே இல்லாதவர் இன்பமாய் வாழ்வதும் உலக இயற்கை. இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய மன நிலையே அன்றி வேறு எதுவும் இல்லை. நன்மை, தீமை எதுவரினும், அவற்றைத் தாங்குகின்ற மனப் பக்குவம் மனிதனுக்கு மிகவும் அவசியமாக இருக்க வேண்டியது அவசியம். இதனை அறியாமல், அவன் ஏன், நன்மை வரும்போது மட்டும் இன்பம் அடைகிறான். துன்பம் வரும்போது மட்டும் வருந்துகிறான். இதனை உலக இயற்கை என்று நினைத்து ஏன் இரண்டையும் சம நிலையில் பார்க்கும் மனநிலையை அவன் அடையவில்லை என்று நம்மையே வினவுவது வள்ளுவம். எல்லாம் விதிப் படிதான் நடக்கும் என்று இல்லாமல் எதையும் எதிர்த்து போரிட்டு, அவனுடைய முயற்சியினால், அவ்வூழினை வென்று உலக இன்பத்தை அடையும் வழியை இதன்மூலம் தெளிவுறுத்துகிறார் என்பது தகும்.

மேற்கூறிய கருத்துக்கு அரண் சேர்க்கும் வகையில், ''ஊழுக்கும் கடவுளுக்கும் உறவில்லை; ஊழுக்கு மனித ஆற்றலிலும் மிகுந்த பேராற்றல் இல்லை. 'வகுத்தான்' என்ற சொல் மனிதனையே குறிக்கும். மனிதன் தன் உள்ளுணர்வுகளில் எதனை நினைத்தானோ அச்செயல் களின் விளைவையே அவன் அனுபவித்தாக வேண்டும்'' என்ற கூற்றும் நோக்கத்தக்கது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது. 'ஊழ் ஒரு இயற்கை நிகழ்ச்சி' அதை அழிக்கத்தக்க துணைவலி கொண்டு எதிர்த்தாலன்றி அது முனைந்து முன்னேறும். உலையா முயற்சிக்கெதிரே ஊழ் நில்லாது பின்னடையும். இதுவே வள்ளுவர் கூறும் இருவேறு குறள்களையும் ஒருசேரக் கூட்டி ஆராய்ந்து, காணும் உண்மையாகும். 'ஊழையும் உப்பக்கம்' காண்பர் என்பதிலுள்ள உம்மை ஊழின் பெருவலியை வற்புறுத்த வந்தது. பொதுவான முயற்சி ஊழை வெல்லப் போதாது. எதற்கும் சலியாத் தாளாண்மையே,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருவலியுடைய ஊழையும் ஓட்டி, வெல்ல வல்லது என்பதே வள்ளுவர் கூறும் வாய்மை.''[8]

இக்கருத்திற்கு மேலும் வலுவூட்டும் வகையில், தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள் எனும் நூலில் ஆசிரியர் கூறும் கூற்றும் எண்ணுதற்குரியது.

''வினைக் கொள்கையால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. வினை நம்பிக்கை, நல்லது செய்ய மனிதரைத் தூண்டியது. அதே வேளையில் சிலரைச் சும்மா இருக்கத் துணையும் ஆனது. வினை என்று சொன்னவுடன் மனிதன் தன் செயல் ஒன்றும் இல்லை என்று ஒதுங்கி ஒடுங்கி விடுதலைச் சான்றோர் பார்த்துள்ளனர். இதனால்தான், ஊழ்வினையின் ஆற்றலை, வற்புறுத்திய வள்ளுவரே, ஆள்வினை உடைமையை, முயற்சியை வற்புறுத்த நேர்ந்தது. 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்று எடுத்துரைக்க வேண்டி வந்தது.''[9]

உலக வாழ்க்கையில் இன்பமுற்று வாழ்வதற்கு, வேண்டிய நெறிமுறைகளை எடுத்துச் சொல்லும் வள்ளுவம், அறநெறிகளிலிருந்து பிறழ்ந்து வாழும் வாழ்க்கையினால் ஏற்படும் கேட்டினையும் எடுத்துக் கூறுகிறது. ஒவ்வொரு மனிதனின் செயலுக்கும் அவனுடைய மனமே சொர்க்கமாகவும் நரகமாகவும் உள்ளதை அறியலாம். அவனுடைய செய்கைக்கு அவனுடைய மனநிலையே சான்றாக, சாட்சியாக உள்ளது, என்ற கருத்துப் பெறப்படுகிறது.

பெறப்பட்ட செய்திகள்

1. ஊழ் எனும் சொல்லுக்குத் 'தலைவிதி' என்று அகராதிகள் பொருள் கொள்ளவில்லை.
2. சங்க காலத்தில் 'ஊழ்' என்ற சொல் 'விதி' என்ற பொருளில் சுட்டப்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. சிலப்பதிகார காலத்தில்தான் சமயப்பூச்சு மிகுந்தது. அதனால் ஊழ் எனும் சொல்லோடு வினை எனும் ஒட்டு சேர்ந்து 'ஊழ்வினை' எனும் சொல்லைச் சிலம்பு சுட்டுகிறது.

4. ஊழ் எனும் சொல் வள்ளுவர் காலத்தில் 'இயற்கை நியதி' எனும் பொருளில் சுட்டப் படுகிறது.

5. ஒவ்வொரு மனிதனுடைய செயலுக்கும் அவனுடைய மனஞ்சார்ந்த முயற்சியே காரண மாகிறதே தவிர, விதி காரணமாகவில்லை.

6. வள்ளுவர் 'ஊழ்' எனும் அதிகாரத்தின் மூலம் முயற்சியை, உழைப்பை வலியுறுத்துகிறார்.

குறிப்புகள்

1. தொல்காப்பியம்—சொல்லதிகாரம்—158

2. மறைமலையடிகள், தமிழர் மதம், ப—231.

3. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப—87

4. இரா. வேலு, 'திருக்குறளும் ஊழும்' பதினோ ராவது இந்தியப் பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, ப—647;

5. கு. ச. ஆனந்தன், வள்ளுவர் தரும் பொருளியல் கோட்பாடுகள், ப—136.

6. மேலது, ப—96.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. கு. ச. ஆனந்தன், குறள் கூறும் ஊழ், ப—9
மேற்கோள்

குன்றக்குடி அடிகளார், குறட்செல்வம், ப—89

8. சோமசுந்தர பாரதியார், திருவள்ளுவர், ப-119

9. க.ப. அறவாணன், தமிழர் மேல் நிகழ்ந்த
பண்பாட்டுப் படையெடுப்புகள், ப—240.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்று

வள்ளுவத் தும்மல்

தமிழ் இலக்கிய உலகில் தோன்றிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் வரிசையில் இடம்பெறும் அனைத்து நூல்களும் அறக் கருத்துக்களை வலியுறுத்த எழுதப் பட்டவையாகும். இவற்றை அறநெறிக் காலத்தில் எழுந்த நூல்கள் என்றும் சுட்டுவர். சங்க இலக்கியக் காலக் கட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட ஒழுகலாறுகள், இந்நூல்களில் மறுக்கப்பட்டன. சான்றாக, சங்க இலக்கியக் காலத்தில் போர் வாழ்க்கை போற்றப் பட்டது. புலால் உண்ணுதல், மது அருந்துதல், பரத்தமை ஒழுக்கம் புரிதல் போன்றவைகள் தவறாகக் கொள்ளப்படவில்லை. இவைகள் யாவும் சமுதாய நடைமுறைகள் என மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட் டிருந்தன. இதனை எதிர்த்து முதன் முதலில் குரல் கொடுக்கிறார் வள்ளுவர். புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, வரைவின் மகளிர் என்ற அதிகாரக் கருத்துகள் இதனைத் தெளிவுறுத்தும். குறிப்பாக, தொல்காப்பியம், சங்க இலக்கிய நூல்களில் கூறப்பட்ட பரத்தமை ஒழுக்கத்தைப் பற்றி வள்ளுவர் எக்குறளிலும் சுட்டவில்லை. அந்த ஒழுகலாற்றை மாற்றவேண்டும் என்ற கருத்தினால்தான் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கோட்பாட்டை வரையறுக்கிறார். அதன்படியே வள்ளுவத்தலைவனின் ஒழுகலாற்றினையும் சுட்டுகிறார். வள்ளுவர் ஒரு பண்பாட்டுப் புரட்சியாளர் என்பது மேற் சுட்டிய கருத்தினால் புலப்படும். ஒரு சிலர் வள்ளுவத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவனுக்குப் பரத்தமை ஒழுக்கம் உண்டு என்று வாதிடுவர். அதற்குப் பின்வரும் குறளினைச் சுட்டுவர்.

"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு" (1111)

இக்குறளில் சுட்டப்படும் 'பரத்த' என்ற சொல்லாட்சியே இங்கு சிக்கலுக்குரியது. இக்குறளுக்கு உரை எழுதும் உரையாசிரியர்கள் கூற்று பொருந்துவதாகத் தெரியவில்லை.

'பரத்த' எனும் சொல்லை வள்ளுவர் குறித்திருப்பதினால் வள்ளுவத்தலைவன் பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொண்டவன் எனக் கருதுவது சரியானதுதானா? பரத்தமை ஒழுக்கம் உடையவனாக இருந்தால், வள்ளுவர் சுட்டும் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கோட்பாடு எவ்வாறு பொருந்தும் என்ற வினாவும் உடன் எழும். இவ்வினாக்களுக்கு விடை தேடவும், உரையாசிரியர்கள் கூற்றை மறுமதிப்பீடு செய்யவும் இக்கட்டுரை முயலுகிறது.

உரையாசிரியர்கள் விளக்கம்

மேற்சுட்டிய குறளுக்குப் "பரத்தமையுடையாய் நின்னைப் பெண்ணியல்பினை உடையார் யாவரும் தம் கண்ணால் பொதுவாக உண்பர். அதனால், அவர் மிச்சிலாய நின் மார்பினைப் பொருந்தேன்" என்று பரிமேலழகரும், "பரத்தமையை உடையாய்" நின் மார்பைப் பெண்மை உடையார் எல்லாரும் தமக்குப் பொதுவாக நினைத்துக் கண்ணினாலே நுகரா நிற்பர். அதனால் யான் தீண்டேன்" என்று மணக்குடவரும், பரிப்பெருமாளும் தலைவியின் கூற்றாக வைத்து உரை வகுப்பர். "பரத்தையரால் விரும்பப்பட்ட பரத்தமையுடையாய்! நின் மார்பு பெண்ணின் தகைமையை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடையார் எல்லாரும் பொதுவாக நினைத்துக் கண்ணி னாலே நுகரா நிற்பர். அதனால் யான் அதனைத் தீண்டேன்'' என்பது காலிங்கரின் உரை.

தற்கால உரையாசிரியர்களும் ஏறக்குறைய மேற் சுட்டிய உரையின் அடிப்படையிலே பொருள் விளக்குவர். நாமக்கல் கவிஞர் மட்டும் சற்று வேறுபடுத்தி உரைப்பர். அது வருமாறு: ''பெண் இயல்புள்ள எல்லாரும் கண்ணிற் கண்டு பொதுவாக அனுபவிக்கும் அழகுடையது உன் மார்பு. அழகைக் காட்டி ஆசை மூட்டுபவரே! நான் உன்னைத் தீண்டமாட்டேன்'' இவ்வுரையாசிரியர் களின் கருத்துக்களில், காலிங்கரின் உரையையும் நாமக் கல்லாரின் உரையையும் நுணுகி ஆராய்ந்து நோக்கி னால் சில உண்மைகள் புலப்பட வாய்ப்புண்டு.

எல்லா உரையாசிரியர்களும், வள்ளுவத் தலைவ னைப் பரத்தமை உடையவன் என்றே சுட்டுகின்றனர். 'பரத்தன்' என்ற சொல்லுக்கு தமிழ் அகராதி 'வேசைகளுடன் கூடி ஒழுகும் ஒழுக்கம்' என பொருளுரைக் கிறது. வள்ளுவத்தலைவன், வேசைகளுடன் கூடி ஒழுகு பவனாக எங்கும் சுட்டப்படவில்லை. குறளில் வேறு எங்கும் இச்சொல்லினைப் பயன்படுத்தாமையும் சிந்திக் கத்தக்கது. வள்ளுவர்க்கு முன் எழுந்த தொல்காப்பியத் திலோ, சங்க இலக்கியத்திலோ 'பரத்தன்' என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படாமையும் நோக்கத் தக்கது. வள்ளுவர்தான் முதன்முதலில் இப்புதிய சொல்லாட்சியினை மேற்கொண்டுள்ளார்.

மேற்சுட்டிய உரையாசிரியர்களின் கருத்துகளில் காலிங்கரின் கருத்து ஈண்டு சிந்திக்கத்தக்கது. 'பரத்தை யரால் விரும்பப்பட்ட பரத்தமையுடையவனே' என்கிறார். பரத்தைகள் தாம் விரும்பியதாகச் சொல்லப் படுகிறதே ஒழியத் தலைவன் அப்பரத்தையரை விரும்பிய தற்கான சான்றுகள் குறளில் காணப்பெற இல்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவன் விரும்பி அவர்களுடன் இருந்தால்தான் அது பரத்தமை ஒழுக்கத்தினைச் சாரும். அதேபோல், நாமக்கல்லார், 'பரத்த' என்ற சொல்லுக்கு, "பிற மகளிருக்கு விருப்பத்தினை உண்டாக்கக் கூடிய மார் பழகினை உடைய தலைவன்" என்ற புதிய உயரிய பொருளைத் தருகிறார். மேலும், இவரே, இக்குறளுக்கு விரிவுரை எழுதுவர். அக்கருத்து இங்கு சிந்திக்கத் தகுவது:

"பெண் இயலார் எல்லோரும் கண்ணிற் பொது வுண்பர் என்பதற்குப் பார்த்த பெண்கள் எல்லோரும் பொதுவாக, ஆசை கொள்வார்கள்' என்பது மட்டும் தான் பொருள். 'பெண்ணியலார்' என்பதற்குக் கற்பு, நாண் முதலிய நற்குணங்களின்மையிற், பரத்தையற் குள்ளது. பெண்ணியற்கை மாத்திரமே யென்னும் கருத்தாற் 'பெண்ணியலாரென்றார்'' என்று பொருள் கொள்வது பொருந்துமாறில்லை. 'பெண்ணியலார் எல்லாரும்' என்பதற்கு 'வேசிகள்' என்று பொருள் கொண்டு காதலன் வேசிகள் வீட்டுக்குப் போய் வந்தவனாகப் பேசுவது, திருக்குறளிலுள்ள தூய காமத்துக்கு மாசுண்டாக்கும். 'பரத்த' என்பது 'பரத்தை' என்பதன் ஆண்பால். பரத்தையர் பல பேருக்குத் தம்முடையஅழகைக் காட்டி,ஆசைஉண்டாக்கு கிறவர்கள். அப்படிப்போல, தன் கணவன் அவனைப் பார்க்கிறவர்களுக்கெல்லாம் ஆசையுண்டாகும்படி அவ்வளவு அழகாக இருப்பதாக, மறைமுகமாக காதலி மகிழ்வதை நிந்தனைப் புகழ்ச்சியாகச் சொல்லப்படு கிறது."[1] ஆளைப் பற்றியோ அவர் தம் அழகைப் பற்றியோ கவலைப்படாத பொருட்பெண்டிரே பார்த்து ஆசைப்படும் மார்பழகு வாய்க்கப் பெற்றவன் எனத் தலைவி தன் தலைவனின் அழகு பற்றிப் பெருமிதம் கொண்டதாகவே இதற்குப் பொருள் கருத வேண்டும்.

இக்கருத்தை அடியொற்றிச் சிந்திக்கும்போது, தலைவன் பிற பெண்களை விரும்பவில்லை என்பது தெளி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாகிறது. இவனுடைய அழகின் காரணமாகவே, மற்றவர்கள் இவன்மீது விருப்பங்கொள்கின்றனர். இப்பாடல் நிகழ்ந்த சூழலாக குறிக்கும்போது. பரிமேலழகர் ''உலாப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது'' என்பர். தலைவன் வீதியில் உலா போகும்போது, வீதியில் உள்ள பெண்களின் பார்வை இவன்மீது படும். ஆதலால் பெண்கள் கண்களாலேயே உன் மார்பினை எச்சில் படுத்தி விட்டனர். அதனால் நீ மாசு பெற்றவனாகிறாய். உன்னைத் தழுவ மாட்டேன் என்கிறாள். மன்னன் உலா போகும்போது எழுவகை மகளிர் அவன்மீது மையல் கொள்வதாக வரும் இலக்கிய மரபு ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. தலைவன் மீது பலர்கண்கள் பட்டனவேயன்றித் தலைவன் எவ்விதத் தவறும் செய்யவில்லை என்பது பெறப்படும்.

ஈண்டு கம்பராமாயணப் பாடல் ஒன்றும் சிந்தித்தற்குரியது.

''தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைக்கண் டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்து அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்''

(கம்பராமாயணம்—உலாவியல்-படலம்-6)

எனும் பாடலடிகள் இராமன் மிதிலை நகர் வீதியில் உலா வரும் காட்சியை மகளிர் காண்பதாகச் சுட்டுகிறது. அந்நகர இளம் மகளிர் எல்லாம் அவன் அழகில் மையல் கொண்டனர் என்ற குறிப்பு சுட்டப் பெறுகிறது. மேலும், அவன் தோளழகைக் கண்ட மகளிர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோளினைத் தவிர வேறு எந்த உறுப்பையும் நோக்கவில்லையாம் இவ்வாறு, ஒவ்வொரு உறுப்பையும் கண்ட மகளிர் அவ்வவ் உறுப்புகளை மட்டுமே நோக்கிக் கொண்டிருந்தனராம். இராமன் அழகின் மீது மையல் கொண்ட மகளிரின் பார்வைகள் அவன்மீது படுவதால் அவன் ஒழுக்கம் தவறியவன் என்று கருத முடியுமா? இயலாது. அதைப் போன்று தான் வள்ளுவர் சுட்டும் 'பரத்த' என்ற சொல்லாட்சியும்.

பரத்தமை ஒழுக்கத்திற்குப் பின்வரும் கருத்து விளக்கம் அமைகிறது.

''கொண்டாள் மனையகத்திருக்க, ஊனுடல், இன்பம் பேணல் வேண்டி மானென நோக்குடைய பல்பெண்டிரொடு கூடி இன்புறும் கூடா ஒழுக்கமே பரத்தமை ஆகும். பொருள் மேல் படர்ந்த... வரைவில் மகளிர் உள்ளம் அதனை உடையார் பலர்பாலும், பரந்து இயலுவதாயிற்று. அதனால் அவர்கள் பரத்தையர் எனப் பட்டனர். ஒருவரை விட்டுப் பலர்பால், உள்ளம் செலுத்தும் செயல் பரத்தமை என்று குறிக்கப் பட்டது.''[2]

இவ்விளக்கக் கருத்தினை அடியொற்றிக் குறள் கருத்தினைச் சிந்தித்தல் வேண்டும். இல்லக் கிழத்தியை வீட்டில் இருத்திவிட்டுப் பிற பெண்களுடன் தலைவன் தொடர்பு கொள்ளும் இழிநிலையை வள்ளுவர் எங்கும் குறிக்கவில்லை. வள்ளுவர்க்கு முந்தியதாகக் கருதப்படும் சங்க இலக்கியக் காலத்தில் ஒருவன் பலரை மணந்து கொள்ளும் நிலை இருந்தது. ஆனால், வள்ளுவர் பலதார மணமுறையைப் பற்றி எங்கும் சுட்டவில்லை. 'வரைவின்மகளிர்' எனும் அதிகாரத்தில், பரத்தையரைக் கண்டித்து பேசும் வள்ளுவம், பிறனில் விழையாமையை வெறுத்தொதுக்கும் வள்ளுவம், எப்படித் தலைவனுக்குப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரத்தமை ஒழுக்கம் உண்டு என்று கூறும்? தலைவன் பரத்தமை ஒழுக்கம் உடையவன் எனக்கொள்ளும் கருத்து ஐயத்திற்குரியது. சமுதாயச் சீர்கேடுகளைக் களைய முனையும் வள்ளுவர், பரத்தமை ஒழுக்கத்தை வலியுறுத்த மாட்டார் என்பது தெளிவு.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் பரத்தமை ஒழுக்கம் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. தலைவன், தலைவி இருவர்தம் அகவாழ்க்கையில் ஏற்படும் ஊடலுக்குக் காரணமாக அமைபவள் பரத்தை என்பது அப்பாடல்கள் கூறும் செய்தி. தலைவியுடன் வாழ்க்கை நடத்தும் தலைவன், இன்பத்தின் பொருட்டுப் பரத்தையிடம் செல்லும் பழக்கம் உள்ளதைப் பண்டை நூல்களிலும் காணமுடிகிறது. மேலும் கற்பு வாழ்க்கையில், தலைவன், தலைவியை விட்டுப் பிரிந்து செல்வான். அத்தகைய பிரிவு வகைகளில் பரத்தையிற் பிரிவும் ஒன்றாகச் சுட்டப்படுகிறது. 'பரத்தையிற் பிரிந்த' (1133) 'பரத்தையின் அகற்சி' (987) போன்ற தொல்காப்பியர் தொடர்களை இதற்குச் சான்றாகச் சுட்ட முடியும்.

'பரத்தை' என்ற சொல்லுக்கு இளம்பூரணர் விளக்கம் தரும்போது, பின்வருமாறு குறிப்பர். ''பரத்தையராவார் யாரெனின் அவர் ஆடலும், பாடலும் வல்லவராகி அழகும், இளமையும் காட்டி, இன்பமும், பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காதவர்'' என்று பொருள் உரைப்பர். அவ்வாறான பெண்டிரையோ, வேறொரு உரிமைகளையோ கருதாதவன் வள்ளுவத் தலைவன். பலரும் விழையும் அழகு பொருந்தியவன் தன்னுடன் இணைந்திருக்க விரும்பிய தலைவியின் போலியான கோபமே இக்குறள்.

நாமக்கல்லார் சுட்டுவது போன்று 'பரத்த' என்ற சொல்லுக்கு அழகைக் காட்டி ஆசைமூட்டுபவர் என்றே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருள் உரைப்பது சிறப்பைத்தரும். பிரிவு வகையினை, ஆயிடைப் பிரிவு, சேயிடைப் பிரிவு என இருவகையாகப் பகுத்துரைப்பர். ''பரத்தையிற் பிரிவு ஒன்று ஒழிந்த பிறவெல்லாம் சேயிடைப் பிரிவு. தொலைவில் உள்ள இடத்திற்குப் போக வேண்டுதலின் சேயிடைப் பிரிவு ஆயின. பரத்தையிற் பிரிவோ ஆயிடைப் பிரிவு. அவன் வாழும் ஊரிலேயே பரத்தையர் வாழ்வார் ஆதலின் அவ் வூர்க்குள்ளே பிரிந்து போய் வருகின்றான்.''[8]

வள்ளுவத் தலைவன் இந்த இருவகைப் பிரிவுகளில் சேயிடைப் பிரிவைக் கொண்டதைச் சில குறள்களில் வள்ளுவர் கூறுகிறார். கல்வி கற்க, பகையை வெல்ல, பொருள் தேடச் செல்வாரைப் போன்றே உயரிய முயற்சியில் ஈடுபடுவதற்கு மட்டும்தான் தலைவன் பிரிந்து செல்கிறான். எவ்விடத்திலும் பரத்தையிற் பிரிவைப் பற்றிய ஆயிடைப் பிரிவைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இக்கருத்துக்களின் அடிப்படையில் சிந்திக்கும்போது, வள்ளுவத் தலைவன் பரத்தமை ஒழுக்கம் உடையவன் அல்ல என்பது தெளிவுபடும்.

வள்ளுவர் இத்தகைய ஒழுக்கம் உடைய பெண்களை அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார், பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர், பொருட் பெண்டிர், வரைவிலா மாணிழையார், இருமனப் பெண்டிர் எனப் பல சொற்களில் குறிப்பிடுகிறார். இவர் களிடம் நட்பு கொண்டால், அன்பை எதிர்பார்க்காமல் நம்மிடம் இருக்கும் பொருள்மீதே குறியாக இருப்பர் என்றும் உரைப்பர். இதன் காரணமாகவே பொருட் பெண்டிர் என்றுரைத்தனர். மேலும், ஒரு நிலையான மனநிலையைப் பெற்றிருக்கமாட்டார்கள். இன்று ஒருவ ருடன் இணைந்து இருப்பர், மற்றொருநாள் மற்றொருவ ருடன் இணைந்து இருப்பர் என்றும் உரைப்பர். இவர் களுடைய நட்பினால் கிடைக்கும் இன்பத்தை ஓர்உவமை யின் மூலம் எடுத்து விளக்குவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று" (913)

பொருட்பெண்டிருடன் கொள்ளும் முயக்கமானது, ஓர் இருட்டறையில் உள்ள பிணத்தை தழுவியதை ஒக்கும் என்று கூறுவார். இத்தகைய இழிநிலையில் வரைவின் மகளிரைப் பற்றி உரைக்கும் வள்ளுவர், சிறந்த ஒழுக்க சீலனாகப் படைக்கப்பட்டு இருக்கும் தலைவனுக்கு இத்தகைய ஒழுக்கம் இருந்தது எனக் கூறுவதாகக் கொள்ள எவ்விதமான சாத்தியக் கூறுகளும் இல்லை.

சாத்தனாரும் பரத்தையரைப் பற்றிக் கூறும் பொழுது,

"கணிகை யொருத்தி கைத்தூண் நல்க
வட்டினும் சூதினும் வாண்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலின்
பேணிய கணிகையும் பிறர்நயங் காட்டிக்
காணம் இலியெனக் கையுதிர் கோடலும்"

(மணிமேகலை: 16:6-10)

என்றுரைப்பர். இச்செய்யுள் வரிகளில் இருந்தும், வரைவின் மகளிர் எனப்படும் பரத்தையர் பொருள்மேல் மட்டுமே குறியாக இருப்பர் என்று அறியமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியைப் பற்றிக் குறிப்பிடும்போது அவள் கணிகையர் குலத்துஉதித்தவள் என்று உரைப்பர். ஆயினும் அவள் பரத்தையல்லள் என்று பலரும் உறுதிப்படுத்துவர். நூலில் மாதவி கோவலனைத் தவிர வேறு ஆடவனையும் விழைந்ததாகச் சுட்டவில்லை. "காப்பியக் கதை, கணிகையான மாதவியை, உயர்த்திப் பாட வேண்டியிருக்கும் என்பது ஒருபுறமிருக்க, ஓரிடத்தும் அவள் செல்வத்தை விழைகின்ற நெஞ்சுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வளாகவோ, பொருளுக்கெனப் பல்லோரைப் புணரும் புல்லியளாகவோ காட்சி தரவில்லை என்பதை எண்ண வேண்டும். இளங்கோவின் படைப்பாகிய சிலம்பு பரத்தமையின் மூடுவிழாவைக் காட்டும் அரிய நூல் என்ப.''[4]

எல்லோரும் மாதவியைப் பரத்தையர் குலத்தில் உதித்தவள் என்று சொன்னாலும், அவள் குணநலன்களாலும், நடத்தையின் மூலமும் குலப்பெண்ணாகவே நடந்து கொள்கிறாள். கோவலனை விரும்பிய மாதவி, பிறிதொரு ஆடவனை மனதாலும் நினைக்கவில்லை. மாதவியை விட்டுக் கோவலன் பிரிந்து சென்ற பிறகும் கோவலனின் நினைவாகவே உள்ளாள். பின்னர் துறவு வாழ்க்கையினை மேற்கொள்கிறாள். இது பரத்தையரின் போக்கு அன்று. கோவலனுக்கும், தனக்கும் பிறந்த மணிமேகலையையும் துறவு வாழ்க்கை மேற்கொள்ளச் செய்கிறாள். எனவே, மாதவியைப் பொறுத்தவரை அவள் குலமகளாகவே கருதப் படவேண்டியவள். இத்தகைய பெண்ணுடன் தொடர்பு கொண்ட கோவலனைப் பரத்தன் என்றும், அவன் பரத்தமை ஒழுக்கம் உடையவன் என்று கூறுவதும் பொருத்தமாகாது. இக்கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில் பின்வரும் கூற்று அமைந்துள்ளது:

''வறுமொழி பேசுவாருடனும், வம்பப் பரத்தரொடும், அவன் திரிந்தான் என்பதை, அவனது சொற்களாலன்றி, இளங்கோவே,

''குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபின் கோவலன் போல''

(சிலம்பு:1:5:200-201)

என்ற வரிகளில் சுட்டுவார். கோவலன் வாழ்வது ''பரத்தையர்கள் நிறைந்த வீதியிலுள்ள மாதவியின் இல்லத்தில், அதனை 'நகரநம்பியர் திரிதரு தெரு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று அரங்கேற்று காதையிலேயே கூறிவிட்டார் ஆசிரியர். பரத்தையோடு கூடி வாழ்பவன் பரத்தன் என்பது இலக்கிய மரபு.'' (ம. பொ. சி. கோவலன் குற்றவாளியா. ப.36) அத்தகு பரத்தரொடும், வறு மொழியாளருடனும், பாணருடனும் விழாவில் காலம் கழித்து வணிகத்தைக் கவனியாது இருந்தமையால்தான் குலந்தரு வான்பொருள் இழந்து அவன் அல்லற்படு கின்றான். பரத்தரொடு திரிந்தவன்தான் கோவலனே தவிர, அவன் பரத்தன் அல்லன்.''[5] கண்ணகியிருக்கப் பிறிதொரு நங்கையாகிய மாதவியுடனும் வாழ்ந்த கோவலனே பரத்தன் எனப்படுவதில்லை கட்டிய மனைவியைத் தவிர வேறு நங்கை எவரையும் நோக்காத வள்ளுவத் தலைவன் எப்படிப் பரத்தனாக முடியும்?

இக்கருத்தினை அடியொற்றி வள்ளுவத் தலைவனை நோக்கும்போது, பரத்தமை ஒழுக்கமுடைய பெண்கள், (தன் அழகைக் காட்டி ஆசை ஊட்டுபவர்கள்) தாம் தலைவனின் மீது ஆசைப்படுகிறார்களே ஒழிய, தலைவன் அவர்கள் மீது விருப்பம் கொள்வதாக சுட்டப் பெற வில்லை. என்பதை அழுத்தமாக உணரலாம். பரத்தரொடு தொடர்பு வைத்திருந்ததினால் கோவலனை எப்படி பரத்தன் அல்லன் என்று வாதிடுகிறோமோ, அதேபோன்று, பெண்கள் இவன் மீது படும் ஆசையின் போக்கைக் கொண்டு இவனை பரத்தன் என்று சொல்லு தல் ஏற்புடையதாகாது. எனவே, வள்ளுவத் தலைவன் பரத்தமை ஒழுக்கம் உடையவன் அல்லன் என்பது புலப்படும். சூர்ப்பனகை போன்றாரும் விரும்பும் இராமனைப் பரத்தனாகக் கருத இயலுமா? அதே போன்ற சூழல்தான் வள்ளுவரின் காமத்துப்பாலின் இக்குறட் சூழல்.

புலவி நுணுக்கம் எனும் அதிகாரம் தலைவன் தலைவி யரிடையே நிகழும் ஊடல் நிகழ்ச்சிகளை மட்டுமே எடுத் துரைக்கின்றது. ஊடல் என்பது, காதல் வாழ்க்கையின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்பு அம்சமாகும். வாழ்க்கையில் தலைவன் தலைவியரிடையே இந்த ஊடல் நிகழ்ச்சி நடைபெறவில்லை என்றால் சிறப்புப் பெறாது. இதனைத்தான் வள்ளுவர்,

> **"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்**
> **கூடி முயங்கப் பெறின்"** (1330)

எனும் குறளில் எடுத்துரைக்கிறார். எனவே, தலைவன் தலைவியர்க்கிடையே ஊடல் நிகழ ஏதேனும் ஒரு காரணம் வேண்டும். சங்கத்தலைவி என்றால் தலைவன் பரத்தையரோடு தொடர்பு வைத்திருப்பதைக் காரணம் காட்டி ஊடுவாள். ஆனால், வள்ளுவத் தலைவி அவ்வாறு பரத்தமையைக் காரணமாக கொண்டு ஊட முடியாதபடி தலைவன் நெறியாளனாக உள்ளான். ஆனாலும் சுவை கருதி ஊடல் அமைய வேண்டும். ஊடுதல் எனும் நிகழ்ச்சி நடைபெற்றால்தான், அதன் பின்னால் நடைபெறும் காமஇன்பம் சிறக்கும் என்பது தெளிவு. எனவேதான், வள்ளுவத்தலைவி பொய்யாகச் சில காரணங்களை கற்பித்துக் கொண்டு தலைவனுடன் ஊடல் நிகழ்த்துகிறாள். அவற்றுள் ஒன்றே தலைவன் மார்பு பல பெண்களால் காணப்பெற்று மாசுபட்டிருப்பதாகக் கூறி அவனுடன் ஊடும் நிகழ்ச்சி.

தலைவனும், தலைவியும் அருகருகே உட்கார்ந்து இருக்கும்போது தலைவன் தும்முகிறான். அருகில் இருப்பவர் யாராவது ஒருவர் தும்மினால் அவர்களை வாழ்த்துவது மரபு. அம்மரபின் காரணமாக முதலில் தலைவி தலைவனை வாழ்த்துகிறாள். பின்னர், நினைவு வந்தவளாக அழத் தொடங்குகின்றாள். காரணம், தலைவ்னை வேறு எவரோ நினைப்பதாகப் பொய்யாகக் கற்பனை செய்து கொள்கிறாள். "நான் தங்கள் அருகில் அமர்ந்து இருக்கும்போது, என்னைத் தவிர உங்களை வேறு யார் நினைக்கிறார்கள் என்று வினவுகிறாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்முடன் நெருங்கிய தொடர்புடையவர் யாரோ ஒருவர் நம்மைப் பற்றி நினைக்கும்போது தும்மல் வரும் என்பது தமிழர் நம்பிக்கை. அந்நம்பிக்கையின் அடிப்படை யிலேயே, ''என்னைத் தவிர உனக்கு நெருங்கியவர் வேறு யார் இருக்கிறார்கள்'' என்று வினவுகிறாள். தலைவனை நினைப்பது அவன் உறவினராகவும் இருக்கலாம்; அவன் தாய் தந்தையராகவும் இருக்கலாம். அவர்கள் நினைத்துக் கொண்டதாக தலைவி நினைத்து தலைவனை ஊடினாள். அவ்வூடல் சிறப்புறாது. எனவேதான், நெருங்கிய வேறு யாரோ ஒரு பெண் தலைவனை நினைக்கிறாள் என்று ஒரு பொய்யான காரணத்தைக் கற்பனை செய்துகொண்டு, 'யாருள்ளித் தும்மினீர்' என்று வினவுகிறாள். அவள் வினவும்போதே, மறுபடியும் தலைவனுக்கு தும்மல் வருகிறது, அதனைத் தடுக்க முயற்சி செய்கின்றான். அப்போது, மறுபடியும் வினவு கிறாள். ''தங்களை வேறு எவரோ நினைப்பதை நானறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவா தும்மலை அடக்குகிறீர்கள்'' என்று வினவுகிறாள்.

இவ்வாறு, இல்லாத ஓர் ஒழுக்கத்தினைப் பொய்யாக கற்பனை செய்து கொண்டு பலபடச் சொல்லி ஊடுகின்ற தலைவியின் அவயங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து மையல் கொண்டு இருக்கிறான் தலைவன். இதனை அறிந்த தலைவி, ''யாருடைய அவயங்களை கற்பனை செய்து கொண்டு என்னை நோக்குகின்றீர்'' என்று வினவுகிறாள். அவளைச் சமாதானம்செய்யும்பொருட்டு, அவளிடம் மெல்லப் பேச்சுக் கொடுக்க முயல்கிறான் தலைவன்.

''யாரினும் காதல மென்றேனா வூடினாள்
யாரினும் யாரினு மென்று'' (1314)

அப்போது தலைவன், 'யாரினும் காதல மென்றான்' இதற்கும் தலைவி வேறு விதமாகவே பொருள் கொள் கிறாள். 'தலைவனாகிய என்னால் காதலிக்கப்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலருள்ளும் நின்கண் காதலுடையேன்' என்று தலைவன் கூறுவதாகப் பொய்க் கற்பனை செய்து கொண்டு, உங்களுக்குத் தொடர்புடையவர் பல மகளிர் என்றீரே, அவர்களில் எந்தப் பெண்ணை அதிகமாக விரும்புகிறீர் களோ அவர்களைவிட நான் சிறந்தவளா என்று வினவு கிறாள். எனவே, தலைவன் அவளைச் சமாதானம் செய்யும் பொருட்டு, 'நான் இம்மையில் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்' என்று கூறுகிறான். இதனைக் கேட்டும் அவள் ஊடுகிறாள். காரணம் இம்மையில் பிரிய மாட் டேன் என்று சொன்னால், மறுமையில் பிரிந்து விடுவார் என்று பொருள் கொண்டு ஊடுகிறாள். இறுதியில் ஊடல் தணிந்து இருவருமே சமாதானமாகி விடுகின்றனர்.

மேற்சுட்டப்பெற்ற வண்ணம் தலைவனுக்குப் பல பெண்களுடன் தொடர்பு இருப்பதைப்போலக் கற்பித்துக் கொண்ட தலைவியே ''பரத்த'' என விளிக்கிறாள். யாவும், பொய்யானவை என்று குறள் கருத்தே சான்று பகர்கிறது.

''இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு'' *(1321)*

எனும் குறளில், தலைவனிடம் உண்மையிலேயே குற்றம் இல்லை. ஆயினும் அவருடன் இவ்வாறு பிணங்குவதால் மேலும், மேலும் இருவர்க்கும் இடையே உண்டாகும் அன்பு, விருப்பம் மேலும் வலுப்படுகிறது. அதன் காரண மாகவே, தலைவி இவ்வாறு, இல்லாத ஒன்றினை இருப் பதுபோன்று கற்பனை செய்து கொண்டு ஊடுகிறாள். இவ்வாறு அவர்கள் பிணங்கி, சிறிது நேரம் பிரிந்திருந்து புணரும் போது அதனால் மிகு பயன் விளையும் என்றுரைக் கிறாள். இக்கருத்தினை விளக்கும் குறள் பின்வருமாறு.

''ஊடலிற் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்'' *(1322)*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பரத்த நின் மார்பு' என்று தலைவனை அவள் பொய்யாகத்தான் விளிக்கிறாள். தலைவன் உண்மையிலேயே பரத்தமை ஒழுக்கம் உடையவன் அல்லன். பரத்தமை ஒழுக்கம் உடையவனாக அவனை வள்ளுவர் சுட்டி இருப்பாரேயானால், அவ்விடத்தில் 'ஒருவன் ஒருத்தி கோட்பாடு' உருவாக வாய்ப்பு ஏற்படாது. ஆடவனுக்குப் பிற பெண்களுடன் தொடர்பு இருக்கக் கூடாது என்பதனை, வரைவின் மகளிர் அதிகாரத்தில் மட்டும் கண்டித்து உரைக்கவில்லை. பிறனில் விழையாமை அதிகாரக் கருத்திலும் இதனை வலியுறுத்துகிறார். பிறன் மனைவியை விரும்புகின்ற ஆண் தன்மையைக் கடிந்துரைக்கிறார். பெண்ணுக்கு மட்டுமே கற்பு அவசியம் என்று வலியுறுத்திய சூழலில், ஆணுக்கும் கற்பு தேவை என்பதனை பிறனில் விழையாமை எனும் அதிகார கருத்தின் மூலம் நிறுவுகிறார். ஒரு மனைவி இருக்கும்போது வேறு மங்கையரை மனைவிகளாகக் கூடத் தலைவன் கருதக்கூடாது என்பதே வள்ளுவம். பரத்த என்பது போலியான கூற்றே என்பதைப் பிற குறட்பாக்களைக் காணும்போதும் பெற முடியும்.

> **''இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்**
> **கள்ளற்றே கள்வநின் மார்பு''** *(1288)*

என்பது ஒரு குறள். ''கள்வனே, தன்னை உண்டு இன்புற்று மகிழ்பவர்க்கு அக்கள்ளானது எவ்வளவு துன்பத்தைத் தந்தாலும், மீண்டும், மீண்டும் அதனையே சென்று பருகுவர். அதனைப் போன்றே, நீ எவ்வளவு துன்பத்தைக் கொடுத்தாலும், உன் மார்பினை நான் மேன்மேலும் விரும்பத்தக்கதாய் நடந்துக்கொள்கிறாய் என்கிறாள். இவ்விடத்தில் தலைவனை 'கள்வ!' எனத் தலைவி விளிக்கிறாள். இவ்விடத்தில் தலைவனை, 'கள்வன்' என்று மெய்யாகவே கூறியதாகக் கொள்வது பொருந்துமா? அதைப் போன்றுதான் 'பரத்தநின் மார்பு' எனும் சொற்றொடரைக் கொண்டு, தலைவனுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரத்தமை ஒழுக்கம் உண்டு என்று நிறுவ முயலுவதும். இரண்டு குறளிலும், ஆண்மகனின் நெஞ்சு புகழப்படுகின்றது.

''அவனைப் 'பரத்த' என்று விளிப்பதும், பிற மகளிரோடு இணைத்து ஐயுறுவதும் அன்றைய சமுதாயத்தில் மகளிர்க்கிருந்த அச்சவுணர்வின் வெளிப்பாடுகளே. தலைமகனின் தலையளியே ஊடல் கொள்வதற்குக் காரணமாயிற்று எனத் தலைமகளே கூறுவது குறள்காட்டும் தலைமகன் தவறற்றவன் என்பதையே காட்டுகிறது''[5] என்ற கருத்து நெஞ்சில் கொள்ள வேண்டிய ஒன்று. இக்கருத்தை பின்வரும் கூற்றும் மெய்ப்பிக்கும்.

''தொல்காப்பியமும், சங்கப் பாட்டுக்களும் காட்டிய பரத்தையர் பற்றிய இலக்கிய மரபு அவர் தம் உள்ளத்திற்கு இயைந்ததாக இல்லை. பரத்தையரால் தலைவன் பிரிவான் என்பதும், அதனாலேயே ஊடல் நிகழும் என்பதும் அவர் ஏற்றுக்கொள்ள விரும்பாத மரபுகள் ஆயின. ஆதலின், சங்க நூல்கள் போற்றிப் பாடிய கள்ளைச் சிறிதும் போற்றாமல், அடியோடு பழித்துக் கூறியதுபோலவே, திருவள்ளுவர் அந்தப்பரத்தமை ஒழுக்கத்தைப் பொருட்பாலில் வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தில் கடிந்து கூறத் தலைப்பட்டார். அக்காரணத்தாலேயே, பழைய மரபுகளை நினைவூட்டும் 'பரத்தை' முதலான சொற்களையும் விளக்கினார். ஆயினும், காதலரின் வாழ்வில் ஊடலுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு, என்பதை உணர்ந்தவராதலின், அந்த ஊடலை, விலக்குவேன் என்று துணிந்தார். ஆயினும், பரத்தையர் பிரிவு இல்லாமலே, பரத்தையர் இல்லாமலேயே, புதுவகையில் பாடுவேன் என்று முன் வந்தார். முயற்சியில் வெற்றியும் பெற்றார்.''[6]

இக்கருத்துக்களை எல்லாம் சிந்திக்கும்போது, வள்ளுவத் தலைவனுக்குப் பரத்தமை ஒழுக்கம் இல்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது தெளிவாகிறது. வள்ளுவர், ஒருவனுக்கு ஒருத்தி கோட்பாட்டை நிறுவுவதற்கான விதையைக் காமத்துப் பாலில் நட்டுள்ளார். அவ்விதையானது, இல்லறவியல் பகுதியில் செடியாக முளைத்தது எனலாம். பின்னர், எழுந்த சிலப்பதிகார காலத்தில் அது மரமாகத் தழைத்து ஓங்கி சமுதாயம் முழுவதும் மனம் பரப்பச் செய்தது, என்று கூறுதல் மிகையாகாது. வள்ளுவர் குறளில், வரைவின் மகளிரைக் கடிந்துரைக்கிறார். இளங்கோ, கடிந்துரைத்த மகளிரின் குலத்தில் உதித்த ஒரு பெண்ணை குலப்பெண்ணாக உருவாக்கிப் புரட்சியைப் படைக்கிறார்.

பெறப்பட்ட செய்திகள்

1. 'பரத்த' எனும் சொல்லுக்குப் பழைய உரையாசிரியர்கள், 'பரத்தமை ஒழுக்கம்' என்று பொருள் கூறுவர். இது பொருந்தாது.
2. 'பரத்தன்' என்ற சொல்லாட்சி வள்ளுவத்தில் தான் முதன்முதலில் சுட்டப்படுகிறது.
3. தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் பரத்தையரைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. வள்ளுவத்தில், பரத்தமை ஒழுக்கத்தைக் கடிந்துரைக்கும் பகுதிதான் காணப்படுகிறது.
4. தலைவி தலைவனைப் 'பரத்த நின் மார்பு' என்றது அன்பு மிகுதியினாலே அன்றி பரத்தமை ஒழுக்கத்தைக் குறிப்பதற்கன்று.
5. திருக்குறளில் காமத்துப்பால் பகுதியில் உள்ள தும்மல் குறிப்புகளைக் கொண்டு, வள்ளுவர் 'ஒருவன் ஒருத்தி கோட்பாட்டை' நிறுவுகிறார்.
6. இதனை அடியொற்றி எழுந்த சிலப்பதிகாரம், பரத்தமை ஒழுக்கத்திற்கு முத்தாய்ப்பு வைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறது. மாதவியை குலமகளாகப் படைத்துக் காட்டுகிறது.

குறிப்புகள்

1. வெ. இராமலிங்கம் பிள்ளை, திருக்குறள் புத்துரை, பக். 804-805.

2. அ. சீநிவாசன், பழசும் புதுசும், ப—33.

3. தெ. பொ. மீனாட்சி சுந்தரம், வள்ளுவரும் மகளிரும், ப—65.

4. அ. அறிவுநம்பி, கூத்தும் சிலம்பும், பக். 100—101.

5. மேலது. ப—98.

6. கு. மோகனராசு, தொல்காப்பியமும் திருக்குறளும், ப—266.

7. மு. வரதராசன், 'ஒரு புரட்சி'—திருவள்ளுவர் விழா திருநாள் மலர், (1968) ப—3.

மேற்கோள் : கு. மோகனராசு, மேற்சுட்டிய நூல், பக் : 279—280.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான்கு

கொழுநன் வழிபாடு

திருக்குறளில் வாழ்க்கைத்துணையாகக் கருதப்படும் இல்லக் கிழத்திக்குத் தனிச்சிறப்பிடம் கொடுக்கப் படுகிறது. திருக்குறள் இடம்பெற்றுள்ள பதினெண் கீழ்க் கணக்கு வரிசையில் வேறுஎந்த நூலிலும், இல்லறமாண்பு சிறப்பாகப் பேசப்படவில்லை. வள்ளுவர்தான், இல்லக் கிழத்திக்கு சிறப்பிடம் கொடுத்து, அவள் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றித் தனியாகப் பட்டியலிட்டுக் கூறு கிறார். அப்பட்டியலில் இடம்பெறும் கடமைகளில் ஒன்று தான் 'கொழுநன் வழிபாடு. இக்கொழுநன் வழி பாட்டைப்பற்றி விளக்க வரும் குறள் கருத்தில் தான் சிக்கலுள்ளது.

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'' *(65)*

எனும் குறளுக்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கங்கள் பலவாகும். அதனாலேற்படும் கருத்து மாறுபாடுகளைச் சிந்திக்க முயலுகிறது இக்கட்டுரை. ''பிற தெய்வங்களை வணங்காமல், தன் கணவனை மட்டுமே வணங்கி எழுகின்ற பெண்ணே சிறந்தவள். அவள் பெய் என்று சொன்னவுடன் மழை பெய்யும் இயல்புடையதாம்'' என் றுரைப்பர் உரையாசிரியர்கள்.

பிற்கால உரையாசிரியர்களுள் புலவர் குழந்தையும், பாரதிதாசனாரும் வழக்கமான பாதையிலிருந்து விலகிச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறிது பொருள் மாற்றி உரைப்பர். பிற தெய்வங்களை வணங்காமல், கணவனையே தெய்வமாக எண்ணி ஒழுகு பவள் எத்தகையவள் என்றால், நாம் விரும்பிய நேரத்து மழை பெய்தால், அஃது எவ்வாறு இருக்குமோ அதைப் போன்றவள் என்ற கருத்தினை வலியுறுத்துவர். உரையாசிரியர்களுள், 'மனைவியானவள் கணவனைத் தொழுது எழவேண்டும்' என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. 'பெய்யெனப் பெய்யும் மழை' எனும் வரிக்குச் சுட்டப்படும் பொருளில்தான் கருத்து வேறுபாடு நிலவுகிறது. பிறதெய்வங்களை வணங்காமல், தன் கணவனை மட்டுமே தெய்வமாக எண்ணி வணங்க வேண்டும் என்று சொல்வதால், பெண்ணானவள் ஆணுக்கு அடிமையாக இருக்கவேண்டும் என்ற கருத்தில் வள்ளுவர் இக்குறளை எழுதியுள்ளதாக உரைப்பாரும் உண்டு. அவர்களின் கூற்று பொருத்தமுடையதா என்பதையும் சிந்திக்க வேண்டுவது தேவையாகிறது.

சமுதாய நிலை

தொடக்கக் காலச் சமுதாயத்தில், அனைத்து நிலைகளிலும், பெண்ணுக்கே முதன்மையிடம் கொடுக்கப் பட்டு இருந்தது என்ற கருத்தினை சமூகவியல் அறிஞர்கள் சுட்டுவர். நாளடைவில் உற்பத்தியின் திறனை அறிந்த ஆண்மகன் சிறிது சிறிதாகப் பெண்ணினத்தை அடக்கி ஒடுக்கி ஆளத்தலைப்பட்டான். பின்னாளில், முழுக்க முழுக்கப் பெண்ணானவள், ஆணுக்கு அடிமையாக இருக்க வேண்டிய சூழல் உருவாகிறது. சமூகத்தில், ஆண் ஆதிக்கச் சமுதாய நிலை ஓங்கியது. கணவன் எந்தத் தவற்றினைச் செய்தாலும், அதனைப் பொறுத்துக் கொண்டுபோவது மனைவியின் கடமை என வலியுறுத்தப் பட்டது. தமிழ் இலக்கிய நூல்களில் இக்கருத்து நேரடியாகச் சுட்டப் பெறவில்லை. ஆயினும், சிலம்புக் கண்ணகியையும், பிற நூல் மாந்தர்களையும் காணும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போது அது தெளிவுபடுகிறது. சங்க இலக்கியத்தில் வரும் சில பாடல்களை இதற்குச் சான்றாகச் சுட்டலாம்.

குறுந்தொகையில் (309) இடம்பெறும் பாடலொன்று சான்றாகச் சுட்டப்படுகிறது. பரத்தையரிடம் தொடர்பு வைத்திருந்த கணவனைப் பார்த்து மனைவி பின்வருமாறு குறிப்பிடுகிறாள். ''வயலில் களை எடுப்போர் அந் நிலத்தில் களையாக முளைத்து வரும் நெய்தற் செடியினைப் பறித்துப்பறித்து வயல் வரப்பிலே போடு வார்கள். ஆனால், அந்த நெய்தல் செடியோ மீண்டும் மீண்டும் அவ்வயலிலேயே களையாக வந்து முளைக்கும். அதனைப் போன்றுதான் நானும். என்னை வேண்டாம் என்று நீ ஒதுக்கினாலும், மீண்டும் மீண்டும் நான் உன்னையே நம்பி வாழ்கிறேன். உன்னை விட்டால் எனக்கு வேறு வழியில்லை'' என்று குமுறுகிறாள்.

இப்பாடலைப் பற்றி விளக்கம் கூறும் அறிஞர் ஒருவர் பின்வருமாறு சுட்டுவர்.

''ஒரு குடும்பப் பெண்ணின் இந்த வேதனைக் குரலுக்கு விளக்கம் சொல்கிறவர்கள் 'கண்டார் இகழ்வனவே, காதலன் தான் செய்திடினும் கொண் டானை அல்லால் அறியாக் குலமகள் இவளோ' என்று போற்றுகிறார்கள். அதுவே, குடும்பப் பெண்ணுக்கு அழகு. அதுவே அவளுடைய கடமை என்றும் விதிக் கிறார்கள். நீ இவ்வளவு கொடியவனாக இருந்தும், ஒழுக்கக் கேடனாக இருந்தும், குடும்பப் பெண் என்று பட்டம் சூட்டப்பட்டிருப்பதாலே அன்றோ, என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்னும் அவளுடைய மவுன வேதனை மொழியை யாருமே கேட்கவில்லை''[1] இக்கூற்று இங்கு நோக்கத்தக்கது.

''சற்றேறக்குறைய இதே காலத்தைச் சேர்ந்த கிரேக்கச் சமுதாயத்திலும், பெண்களின் நிலை இப்படித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் இருந்திருக்கிறது. கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த டெமாஸ்தனீஸ் என்னும் அரசியல் அறிஞன், ஆண்களாகிய நமக்கு இன்பம் தர விலை மாதர் (பரத்தையர்) இருக்கின்றனர். அன்றாடம் நம் உடம்பைப் பேண மனைவியர் உள்ளனர். நம் வீட்டுக் காரியங்களைக் கவனிக்கவும், நமக்கு நன்மக்களைப் பெறவுமே, மனைவியர் இருக்கிறார்கள் என்று சொல்லியுள்ளான். சங்க இலக்கியத் தலைவன் (கணவன்) பரத்தையரோடும் பின்முறை வதுவைப் பெதும்பையரோடும் இன்பம் துய்த்துத் திரிகிறான். தன் மனைவியைப் 'புதல்வன் தாய்' என்றே குறிப்பிடுகிறான்......கிரேக்க நாட்டு வாழ்வை ஆராய்ந்த வில்டுரண்ட் என்னும் அறிஞர் 'தாய் வழியாகச் சொத்துரிமை வந்துகொண்டிருந்த வழக்கம் மாறியதும் கணவன் இறந்தால், அவன் சொத்து அவன் மனைவிக்குச் சேராது' என்ற கிரேக்கச் சட்டமுமே பெண்களின் இந்த நிலைக்குக் காரணங்களாக இருக்க வேண்டும்''[2] என்று கருத்துரைத்திருப்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

ஒரு பெண் இளமை முதல் முதுமை அடையும் வரை பிறரைச் சார்ந்தே, வாழவேண்டும் என்று விதித்திருந்தது பழைய சமுதாயம். இதனைத் தெளிவாக மணிமேகலை விளக்குகிறது.

கன்னிக் காவலும் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறின் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோன் அல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர்.........................

(மணி 18 : 98—102)

இத்தகைய காவலுடன்தான் அன்றைய சமுதாயத்தில் பெண் வாழ வேண்டிய சூழல் நிலவியது. அதன்படியே, பெண்களும் வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவு. தமிழ்

வ.—4

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களிடையே நிலவும், 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' எனும் பழமொழியும் இதனைத் தெளிவுபடுத்தும்.

இதுபோன்ற ஒரு சமுதாயச் சூழலில் தோன்றிய நூல்தான் திருக்குறள். அவர் காலச் சூழலில் வாழ்ந்த பெண்ணானவள் கணவனைத் தொழுது வாழ வேண்டும் என்ற நிலை உருவாகியது. காரணம், சங்க இலக்கியத் தலைவன், பரத்தையரை நாடிச் சென்றதுபோல், வள்ளுவத் தலைவன் பரத்தமை ஒழுக்கம் ஒழுகியவன் அல்லன். பெண்ணுக்கு மட்டுமே 'கற்பு' என்ற இலக்கணத்தை வரையறுத்திருந்த காலத்தில், ஆணுக்கும் கற்பு இன்றியமையாதது என்பதனை வலியுறுத்து கிறார் வள்ளுவர். 'பிறனில் விழையாமை' எனும் அதிகாரத்தை அமைத்து, அதில் மனைவியைத் தவிரப் பிறரை விரும்பும் ஆண்மகனைக் கடிந்து உரைக்கிறார். மேலும், 'வரைவின் மகளிர்' எனும் அதிகாரத்தை அமைத்து அதில், பரத்தமை ஒழுக்கத்தைக் கண்டிக் கிறார். எனவே, வள்ளுவத் தலைவன், பிறன்மனை நய வாத பேராண்மை உடையவன். இல்வாழ்க்கை அறத் தைத் தவறாது கடைப்பிடிப்பவன். அறநெறியில் நின்று வாழ்பவன். இத்தகு சிறப்புப் பொருந்திய தலைவன் தான் வள்ளுவன் தலைவிக்குக் கிடைத்த கணவன். இவனைத் தெய்வமாக மதித்து வணங்குவதில் எந்தச் சிக்கலும் இல்லை. அதனால்தான், வள்ளுவத் தலைவி கணவனை மதித்து வணங்குகிறாள்.

இக்கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில், சங்கப் பாடல் ஒன்று சான்றாகச் சுட்டப்படுகிறது. புறநானூற் றுப் பாடல் (306) ஒன்று இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது. குடும்பப் பெண் ஒருத்தி, தன் ஊரருகே நின்ற ஒரு நடு கல்லை வணங்குகிறாள். ''ஒடியாது விருந்து எதிர் பெறு கதில் யானே; என்ஐயும் வேந்தனொடு நாடுதரு விழுப் பகை எய்துக'' என வேண்டிக் கொள்வதாக ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

FORWARDED FREE OF COST; AND WITH THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF EDUCATION, GOVT. OF INDIA, NEW DELHI
Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புக் காணப்படுகிறது. குடும்ப அறத்தையும், மறத்தையும் வீரத்தையும் இணைப்பது போலத் தோன்றுகிற இச்செய்திக்குள்ளே, அவளுடைய குடும்ப வாழ்வைப் பற்றிய செய்தி ஒன்று மறைந்திருக்கிறது என்று சுட்டுவர் அறிஞர். ''வீட்டுக்கு விருந்து வந்துகொண்டே இருந்தால் விருந்தை உபசரிப்பதற்காக அவள் கணவன் அவளுடனேயே இருப்பான். அதே போல் நாட்டிலே போர் நடந்துகொண்டு இருந்தால் அவன் போர்க்களத்தில் இருப்பான். இந்த இரண்டு கடிவாளங்களும் இல்லாவிட்டால் அவன் பரத்தையிடம் போய்விடுவான் என்பதே குறிப்பு. அவனைத் தடுத்து நிறுத்த வேறு வழி இல்லாததாலேயே நடுகல் தெய்வத்திடம் இந்த இரண்டு வரங்களையும் வேண்டுகிறாள் தலைவி.''[8]

7894

இக்குறிப்புப் பொருளில் காணக்கிடைப்பது இரண்டு செய்திகள், ஒன்று அவள் வணங்கும் தெய்வம் நடுகல். நடுகல் என்பது போரில் இறந்த வீரனுக்காக நடப்படுவது அவனைத் தெய்வமாக மதித்து வணங்குவது அக்கால வழக்கு. இங்கே சுட்டப்படும் சங்கத் தலைவி, மற்ற தெய்வங்களை வணங்காமல், நடுகல்லாகிய வீரனை வணங்குவது சிந்திக்கத் தக்கது. சங்க காலத்தில், கணவனைத் தெய்வமாக மதிக்கும் நிலை உருவாகவில்லை எனலாம். காரணம் கணவன், மனைவியை இரண்டாம் நிலையிலேயே வைத்து மதித்தான். அவன் மனைவியை விட்டுப் பிற பெண்களுடன் தொடர்பு வைத்து இருந்தான். இதனால்தான் தலைவி, நடுகல் தெய்வத்திடம், வணங்கி வேண்டும்போது வேறு வரம் கேட்காமல், தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து பரத்தையிடம் செல்லக் கூடாது என்பதற்காகவே, நாள் தோறும் விருந்தினர் தன் இல்லத்தை நோக்கி வரவேண்டும் என்று வேண்டுகிறாள்.

சங்க இலக்கிய நூல்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தோன்றியவை அல்ல. அவை யாவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

700 ஆண்டுக் கால இடைவெளியில் தோன்றிய நூல்கள் என்று சுட்டுவர். இக்கருத்தின் அடிப்படையில் சங்க இலக்கிய நூல்களை நோக்கும்போது, கலித்தொகையில் இடம் பெறும் 'கேள்வர் தொழுதல்' எனும் சொற்றொடர் கொழுநன் வழிபாட்டைக் குறிப்பதாக உள்ளது. இந்நூல் சங்க இலக்கிய நூல்களில் காலத்தால் பிற்பட்டதாகக் கருதப்படுகிறது. எனவே, இந்நூலில் இடம் பெறும் கொழுநன் வழிபாடு பற்றிய குறிப்பு, வள்ளுவர் காலத்தை ஒட்டி எழுந்த கருத்தின் அடிப்படையில் தோன்றியதாகக் கொள்ள வாய்ப்புண்டு.

இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டுதான், வள்ளுவரும், வள்ளுவத் தலைவனை ஒருத்திக்கு மட்டுமே உரியவனாகப் படைக்கிறார். மேலும், இல்வாழ்வானுக்குரிய கடமைகளை எடுத்துரைக்கும் வள்ளுவர் யார் யாருக்கு எவ்வகையில் கடமைகளை ஆற்ற வேண்டும் என்று பட்டியலிடுகிறார்.

''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' (51)

எனும் குறளில் இறந்தவர்களுக்குச் செய்யும் ஈமக்கடன், தெய்வத்தை வணங்குதல், விருந்தினரை, சுற்றத்தினரை உபசரித்தல், தன்னைக் காத்துக் கொள்ளல் எனும் ஐந்து கடமைகளைச் சுட்டுகிறார். இதில் மனைவி தெய்வத்தை வணங்க வேண்டும் என்று சுட்டவில்லை. மாறாகக் குறளில் அவள் தன் கணவனை மட்டுமே தெய்வமாக வணங்க வேண்டும் என்று சுட்டப்படுகிறது. இதற்கு மனைவி மட்டும் தெய்வத்தை வணங்காமல், கணவனுடன் சேர்ந்து / இணைந்து தெய்வத்தை வணங்கலாம் என்று பொருள் கொண்டாலும் பொருந்துவதாகும். ஈண்டு, ஒரு கருத்து சிந்திக்கத்தக்கது, தெய்வத்தை வணங்கும் போது, வழிபாட்டு நெறிமுறைகளோடு வணங்க வேண்டும். ஆனால், வள்ளுவத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவியால் மதிக்கப்படுகின்ற கொழுநன் மனத்தளவில் தெய்வமாக வழிபடுவது, வழிபாட்டு முறைகளோடு அல்ல. மனத்தளவில் அவனுக்கு உயர்வு கொடுக்கப்பட்டு வணங்கப்படுகிறான் என்றுதான் கொள்ளவேண்டும்.

சிலப்பதிகாரக் கனாத்திறமுரைத்த காதையில், கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகியை நோக்கி தேவந்தி பின்வருமாறு குறிப்பிடுகிறாள். ''காமன் கோவிலுக்குச் சென்று வழிபட்டால், நீ உன் கணவனை அடைவாய்'' என்கிறாள். அதற்குக் கண்ணகி, அவ்வாறு வழிபடுதல் எம் குலத்துக்கு இழுக்கைத் தரும் என்றாள். மனைவி தன் கணவனுடன் மட்டுமே இணைந்து நின்று தெய்வத்தை வழிபட வேண்டும் எனும் மரபு நிலவியதை இதனாலறிய முடிகிறது.

மேலும், தொழுதல் என்பதற்கு 'வணங்குதல்' என்று பொருள் கொள்வதை விடத் தன்னை மதித்து ஒழுகுபவர் களிடம் அன்பு செலுத்தி அவர்களைப் போற்றி வாழ்தல் என்று பொருள் கொள்வதும் இயல்புடையதாக அமையும்.

'கொழுநனை மண்டியிட்டுப் பன்முறை வணங்குவது' என்று பொருள் கொண்டு பெண்களை அடிமை எனப் பேசுவார் பலர். நோன்பு நோற்பாரும் அடைதலாகாத அருமைப் பயனை, மண்டியிட்டு வணங்குவதாலேயே, பெறுகின்றாள் என்பது நம்பத் தகுந்தது அன்று வள்ளுவர் இதைவிட உயர்ந்த பொருளில்தான் இதனைக் குறித்து இருக்க வேண்டும். 'தொழுதல்' என்ற சொல்லின் பொருளைக் கொண்டே 'அடிமைகள்' என்று முடிவுகட்டுவது பொருந்துவது அன்று.

''தொழுதல் என்றால் நமக்கும் மேலானதொரு, பொருளைக் கண்டபோது, மனந்தாழ்ந்து அடங்கி அப் பொருளின் வழி நிற்பதே தொழுகையாம். வணங்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படும் பொருள் உயர்ந்ததொரு நோக்கம் உடையதாதல் வேண்டும்'' [4] என்று விளக்கம் தருவர். எனவே, வள்ளுவர் சுட்டும் தலைவியானவள் கணவனையே மிக உயர்ந்தவனாகக் கருதி அன்பு பாராட்டுகிறாள். அந்த அன்பின் வெளிப்பாடே தொழக்கூடிய தன்மையை உண்டாக்குகிறது எனலாம். 'தொழுத கையுள்ளும்' என வரும் குறட்பாவை இங்கே உடன் வைத்துக் காணின், உண்மை புலனாகும்.

'தொழுது எழுவாள்' எனும் சொற்றொடருக்குத் தரும் உரை விளக்கத்திலும் சிக்கல் உள்ளது. உரையாசிரியர்கள், 'கொழுநன் தொழுது எழுவாள்' என்ற தொடருக்கு கணவனை தொழா நின்று துயில் எழுவாள் (பரிமேலழகர்) என்றும், அவனை நாள்தோறும் தொழுது எழுபவள் (மணக்குடவர்) என்றும், நாடோறும் வணங்கி எழுகின்றவள் (காலிங்கர்) என்றும் பொருள் கூறுகின்றனர். தொழுத பின் எழுவாளா? எழுந்த பின் தொழுவாளா எனும் சொல் விளக்கத்தில் அறிஞர்களுக்கு இடையில் முரண்பாடு உண்டு.

நாட்டுப்புற மக்களிடையே வழங்கி வரும் 'பின் தூங்கி முன் எழுவாள் பத்தினி' எனும் பழமொழியும் இங்கு உடன் வைத்து சிந்திக்கத்தக்கது. கணவனுக்குப் பின்னால் தூங்கி அவனுக்கு முன்னால் எழுவது நடப்பியல். இந்நடப்பியல் கருத்தை உடன்வைத்து நோக்கும் போது, வள்ளுவத் தலைவியும் கணவனுக்கு முன் எழுந்து அவனைத் தொழுதபின் மற்ற செயல்களைச் செய்யத் தொடங்குகிறாள் எனப் பொருள் கொள்ள வாய்ப்புண்டு.

'எழுதல்' என்பதற்கு 'தோன்றுதல்' என்ற ஒரு பொருளுண்டு. மனைவி பொதுஇடங்களில் கணவனுடன் தோன்றும்போது, மற்றவர்கள் இவளைப் பார்த்து, இவள் இத்தகு சிறப்புடையவள் என்று போற்றும்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடந்து கொள்ள வேண்டும். பெய்தால் நலமென்று நினைத்த மாத்திரத்தில் மழை பெய்து மக்களை மகிழ் வித்தால் அஃது எவ்வளவு சிறப்புடையதோ அதனைப் போன்றவள்தான் இவள் என்று மற்றவர்கள் புகழ்ந்து கூறும்படி நடந்து கொள்ள வேண்டும். மேலும் இல்லத் தலைவி, இல்லறம் நடத்தும் சிறப்பினாலேயே கணவ னுக்குச் சமுதாயத்தில் சிறப்புக் கிடைக்கிறது. அவன் பெருமை அடைவதும் மனைவியின் நடத்தையினாலே. பெண்ணின் மூலம் ஆடவன் அச்சிறப்பை எய்தினாலும், மனைவி தன் கணவனாலேயே தன் இல்லத்திற்கு இத்தகு பெருமையெல்லாம் கிடைத்தது என எண்ணுகிறாள். தனக்குக் கிடைத்த சிறப்பையும், தன் கணவனாலே தனக்கு அச்சிறப்பு கிடைத்தது என்று மற்றவர்களை எண்ணச் செய்கிறாள்.

சிலம்பில், வேட்டுவ வரியில், சாலினி கண்ணகியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறாள்.

''இவளோ, கொங்கச் செல்வி; குடமலை யாட்டி;
தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து;
ஒருமா மணிஆய், உலகிற்கு ஓங்கிய
திருமா மணி எனத் தெய்வம் உற்று உரைப்பப்
பேதுறவு மொழிந்தனன் மூதறிவு ஆட்டி''

(வேட்டுவ வரி 47-53)

இப்புகழ் மொழிகளைக் கேட்ட கண்ணகி, தான் அருமை யாகப் பெற்ற கணவனின் முதுகின் பின் ஒளிந்து கொண்டு, அப்பெருமைகள் எல்லாம் தன் கணவனைச் சார்ந்த பிறகே தன்னை வந்து அடையும் என்ற கருத்தின ளாய் ஒதுங்கிக் கொள்கிறாள். இக் குறிப்புரையைக் கொண்டு, மகளிர் தான் செய்யும் அனைத்துச் செயல் களிலும் கணவனையே முன்னிருத்திச் செய்வர் என்ற வழக்கமும் இங்கு எண்ணத்தக்கது. இந்தத் தமிழ் மரபின் படிதான், வள்ளுவத் தலைவியும், கணவனைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வமாக நினைந்து வணங்குகிறாள் என்று கொள்ள லாம்.

இக்கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு காணும் போது, பின்வருமாறு எண்ணத்தோன்றுகிறது. தலைவன் தலைவியர் இருவரும் ஈடுபட்டுள்ள குடும்பத்தில், தலைவிக்குரிய குடும்பக் கடமையாகக் 'கொழுநன் வழிபாடு' என்பது வலியுறுத்தப்படுகிறது எனலாம். கொழுநன் வழிபாட்டை வலியுறுத்துவதன் மூலம் தலைவி தெய்வத்தை வணங்கக் கூடாது என்பது பொருளன்று. திருமணத்திற்கு முன் தெய்வங்களை வழிபட்டுக் கொண் டிருந்தவள்தான் தலைவி. திருமணத்திற்குப் பின், பொதுவில் இல்வாழ்க்கையில் ஈடுபடும் தலைவி, உருவ வழிபாட்டில் ஈடுபடாமல், கொள்கை வழிபாட்டினை மேற்கெள்கிறாள் எனலாம்.

மனைவியானவள் எப்போதும் கணவனைப் பற்றிய சிந்தனையுடன்தான் இருப்பாள். உறக்கத்தில் கூடக் கணவனின் நினைவுதான் மேலோங்கி இருக்கும். எனவேதான் தூங்கி எழுந்த உடன் கணவனை நினைத்து வணங்குகிறாள். அன்று முழுவதும், கணவனின் சொற் படியே நடக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறாள். கணவனைத் தொழுது எழல் என்பது, கணவன் செய்யும் சிறு சிறு தவறுகளை, மன்னித்து, அவன் குணநலத்துக்கு ஏற்றவாறு விட்டுக்கொடுத்து வாழ்தலையும் குறிக்கும்.

'பெய்யெனப் பெய்யும் மழைக்கு' உரைக்கப்பட்ட பொருள் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாகக் கொள்ள இடமுண்டு. கற்புடைய மகளிர் பெய் என்று சொன்னவுடன் மழை பெய்யும் என்ற கருத்து ஏற்புடைய தாக இல்லை. சங்க இலக்கியத்தில் மகளிர் இயற்கையை ஏவியதற்கான சான்று இல்லை. குறளுக்குப் பின்னால் எழுந்த சிலம்பில்தான் கண்ணகி இயற்கையை ஏவும் நிகழ்ச்சி சுட்டப்படுகின்றது. (நெருப்பை ஏவுகின்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகழ்ச்சி) அதேபோல் பத்தினிப் பெண்டிர் பற்றியும், அவர்கள் தாம் நினைத்த காரியத்தை செய்தமை பற்றியும் குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால், வள்ளுவர் காலத்தில் இயற்கையை ஏவும் நிகழ்ச்சி நடைபெற்றதா என்பது ஐயத்திற்குரியதே. எனவே, இதனை மிகைப்படுத் தப்பட்ட பொருள் என்றே உரைக்கலாம். புலவர்கள் அரிதாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியினைத் தாம் கூற வந்த சிறப்பு பொருளுக்கு உவமையாகக் கூறுவதுஉண்டு. வள்ளுவர் காலத்தில் 'மழை' என்பது அரிதாக இருந்து இருக்கும். இதன் காரணமாகவே, 'வான்சிறப்பு' எனும் அதிகாரத்தை அமைத்து அதில் உள்ள பத்துக் குறள் களிலும் மழையின் சிறப்புக்களை எடுத்துக் கூறுகிறார். அந்த அடிப்படையில்தான், பெண்ணின் உயர்நிலையை எடுத்தியம்ப மழையை உவமையாக, ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார் எனலாம். வறியவர்கள், பயிர் விளைய, மழை பெய்ய வேண்டும் என்று தகுந்த காலத்தை எதிர்நோக்கி இருந்தபோது எப்படி மழை பெய்து அவர்களை மகிழ்விக்கிறதோ, அதைப்போன்றே, மனைவியானவளும், கணவனை மகிழ்விப்பவளாகவும், இல்லறக் கடமைகளைத் தவறாது கடைப்பிடிப்பவ ளாகவும் அமைவாள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டதே இக்குறள்.

எனவேதான், இல்லற ஒழுக்கத்தில் ஈடுபடும் ஆணும், பெண்ணும் அறநெறி தவறாது வாழ்க்கை நடத்துவார் களானால் அவர்களுடைய வாழ்வு மேன்மை அடையும் என்ற கருத்தின் அடிப்படையில்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'' (60)

என்ற குறளினை சுட்டுகின்றார். ''நீ இவ்வையகத்தில் வாழ்கின்ற முறைப்படி வாழ்ந்தால்தான் சமூகத்தினர் உன்னை மதித்து வணங்கிப் போற்றுவர்'' என்ற குறிப்பினை இக்குறளின் மூலம் சுட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறளுக்குப் பின்னால் எழுந்த சிலப்பதிகாரத்தில் படைக்கப்பட்டுள்ள கண்ணகியும், இக்கருத்தின் அடிப் படையிலேயே, படைக்கப்பட்டு இருக்கிறாள்.

**''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்–தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து''**

என்ற சிலம்பு வரிகளை இதற்குச் சான்றாகச் சுட்டலாம்.

பெறப்பட்ட செய்திகள்

1. சங்க இலக்கியத்தில் கணவனை வழிபடும் மரபு இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. (கலித்தொகை நீங்கலாக).

2. வள்ளுவர் காலத்தில்தான் 'கொழுநன் வழிபாடு' தோன்றியிருக்கக் கூடும். தலைவன் தலைவியால் மதிக்கப்பெற்ற நிகழ்வாகவே குறளில் குறிக்கப்பெறு கின்றது. இது தெய்வ வழிபாட்டைப் போன்ற பூசை முறைகளைக் குறிப்பதாக அமையாது.

3. வள்ளுவத் தலைவன், ஒருத்திக்கு மட்டுமே உரியவ னாகவே மதிக்கப்படுகிறான். அதனால்தான் அவனைத் தெய்வமாக வணங்கும் போக்குத் தோன்றி யிருக்கக்கூடும்.

4. இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரும் இணைந்து தெய்வத்தை வணங்கும் மரபு கடைப்பிடிக்கப் பட்டது. மனைவி மட்டும் தனித்து தெய்வத்தை வணங்கியதற்கான குறிப்பு இல்லை.

5. குடும்பக் கடமைகளில் ஒன்றாகத்தான் கொழுநன் வழிபாடு குடுப்பிடப்படுகிறது. ஆதலால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வத்தைத் தொழுதல் கூடாது என்பது கருத்தன்று.

6. ஈண்டு சுட்டப்பட்ட வழிபாடு உருவ வழிபாடு அல்ல. கொள்கை வழிபாடே ஆகும்.

குறிப்புகள்

1. சாலை இளந்திரையன், சமுதாய நோக்கு, ப-69.
2. மேலது, ப-71.
3. மேலது, ப-70.
4. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், வள்ளுவரும் மகளிரும், ப-148.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்து

வள்ளுவம் : தேசிய நூல்

நாம் இன்று ஒப்பற்ற உயரிய நூலான திருக்குறளை, 'உலகப் பொதுமறை' என்றும், 'தேசிய இலக்கியம்' என்றும் கூறிக்கொண்டு இருக்கிறோம். இவையெல்லாம் வெறும் வாய்மொழி அளவில் மட்டுமே உள்ளன. இதனை நாம் செயல்முறைப் படுத்தினோமா என்ற வினாவை எழுப்பினால் இல்லை என்ற விடையே கிடைக்கும். நாம் ஏன் இதுவரை அத்தகைய முயற்சியில் ஈடுபட வில்லை? திருக்குறள் உலக அரங்கிற்கும், தேசியத்திற்கும் எட்டாததற்குக் காரணம் நாமேதான். திருக்குறள் அத் தகுதியை எட்டாததற்குக் காரணமாக இருக்கும் சில தடைகளையும், விடைகளையும் கூறி, அதனை உலக அரங்கிற்கும், தேசியத்திற்கும் எடுத்துச் செல்வது என்பதற்கான படிநிலைகளைச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிறப்பு நிலை

நம் தேசத்திற்குத் தேசியப் பறவை உண்டு. தேசிய மலர் உண்டு. தேசிய விலங்கு உண்டு. தேசியக் கொடி உண்டு. ஆனால் நூல் இல்லை. நம் இந்திய தேசிய நூலாகத் 'திருக்குறளை' அறிவிக்க வேண்டும். அது தேசிய நூலாக அறிவிக்கப்பட்டால்தான், இந்திய இலக் கியங்களிலே, சிறந்த இலக்கியமாகத் திருக்குறள் சிறந்து விளங்குகிறது என்றும், உலக அரங்கிலே ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையையும் உருவாக்க முடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்குறள் உலக மக்கள் பின்பற்ற முடியாத அளவிற்கு அறக் கருத்துக்களை கூறவில்லை. இஃது, அறக்கருத்துக்களோடு, கூடிய சிறந்த இலக்கியமாக படைக்கப்பட்டிருக்கிறது. இதில் கூறப்படும் கருத்துக்கள் யாவும் மனிதனை உயர்த்துவதற்காகக் கூறப்பட்டதாகும். சான்றாக, வாய்மை, நடுவு நிலைமை, இனியவை கூறல், புறங் கூறாமை, போன்ற அதிகாரங்களில் வரும் கருத்துக்களைச் சுட்டலாம். இதில் மனிதன் பின்பற்றக் கூடிய கருத்துக்களையே வலியுறுத்துகிறார்.

''வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொல்'' *(291)*

''பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'' *(292)*

போன்ற குறட்பாக்களை இதற்குச் சான்றாகச் சுட்டலாம்.

''ஒவ்வொரு துறையிலும் வானுயர்ந்த நிலைக்கு வையகம் ஏற வழிகாட்டும் வள்ளுவர் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத கடமைகளை ஆற்றுவதிலும், வினை செய்வதிலும், அறம் செறிந்த ஆனால், நடைமுறைக்கு ஏற்ற வழிகளையும் இலக்கணத்தையும் வகுக்கிறார். எனவே, வள்ளுவம் இலக்கியல் நிலையை மனத்தில் கொண்டு இயல்வதான வாழ்வியலை எடுத்து வைக்கும் நூலாகும். எனவேதான், அஃது இன்றையத் தேவையை நிறைவேற்றுகிறது. நாளைய கனவையும் பிரதிபலிக்கிறது. அதனால் அது காலம்கடந்து, இடத்தைக் கடந்து நிற்கும் சிறப்பைப் பெறுகிறது'' எனும், வா.செ. குழந்தைசாமியின் கூற்று சிந்திக்கத்தக்கது.

உலக மொழிகளில் தோன்றிய மற்றைய நூல்களான பகவத்கீதை, கௌடல்யம், (அர்த்தசாத்திரம்), பைபிள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குர்-ஆன் ஆகியவைகள் தத்துவ நூலாகவும், அரசியல் நூலாகவும், சட்ட நூலாகவும், மத நூலாகவும் இருக்கின்றனவே தவிர, திருக்குறளைப் போன்று அனைத்துக் கூறுகளையும், உள்ளடக்கிய ஒன்றாக இவை திகழவில்லை. அதனால்தான் 'திருக்குறள்' இவற்றிலிருந்து தனித்து நின்று காலத்தை வென்று இன்றளவும் நிற்கிறது.

> ''நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே
> கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு''

எனும் பழம் பாடல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எவையெனச் சுட்டுகின்றது. இதில் இடம்பெறும் 'முப்பால்' எனும் நூல், திருக்குறளைச் சுட்டாது என வாதிடுவர் ஒரு சிலர். இதில் சுட்டப்பட்ட பல நூல்கள், சமயத்தைப் பரப்புவதற்காகவும், சமயக் கருத்துக்களை அறக்கருத்துக்களின் வழி மக்களிடம் புகுத்த எழுந்த நூல்களேயாகும். இப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலிருந்து, திருக்குறள் தனித்து விளங்குகிறது. திருக்குறளில் எந்தச் சமயக் கருத்தோ, சாதிக் குறிப்போ, குலக் குறிப்போ கடுகளவும் இடம்பெறவில்லை; பின்னால், வந்தவர்களே அவரவர் சமயத்திற்கேற்ற கருத்துக்கள் இதில் அடங்கியிருக்கின்றன என்றும், அதனால் இது அவரவர் சமயத்திற்கே உரிய நூல் என்றும் உரிமை கொண்டாடுகிறார்களே ஒழிய, இதில் சாதிக் குறிப்பு எங்கும் இடம் பெறவில்லை.

> ''மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்'' (134)

எனும் குறளில் சுட்டப்படும் 'பார்ப்பான்' எனும் சொல் யாரைக் குறிக்கும் என்ற வினாவினை எழுப்புவர். இதில் சுட்டப்படும் பார்ப்பான் எனும் சொல் அந்தணனை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அல்லது பிராமணனைச் சுட்டாது. 'பல நூல்களை ஆராய்ந்து பார்ப்பவன்' எனும் பொருள்படுமே தவிர, அது சாதியை, குலத்தைச் சுட்டாது.

''வள்ளுவர் குறளில் சொல்லின் வன்மை பற்றிப் பேசுவார். ஆனால் எந்த மொழியின் பெயரையும், தம் தாய்மொழியான தமிழ் உட்படக் குறிப்பிட மாட்டார். நாடுபற்றிப் பேசுவார். ஆனால், எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிட மாட்டார். எந்த இனத்தின் பெயரையும் குறிப்பிட மாட்டார். நீரைப் பற்றிப் பேசுவார். நதி வளத்தின் தேவை பற்றிப் பேசுவார். ஆனால், எந்த நதியின் பெயரையும் குறிப்பிட மாட்டார். வான் பொய்க்கினும், தான் பொய்யாக் காவிரியோ, பொருநையோ, வைகையோ குறளில் இடம்பெற வில்லை. அரசு, அமைச்சு, ஆட்சி பற்றிப் பேசுவார். ஆனால், அரச பரம்பரையையோ மூவேந்தரையோ குறிப்பிட மாட்டார். நாடுபற்றிய பெயரோ, அரச பரம்பரை பற்றிய பெயரோ மதம் பற்றிய பெயரோ குறளில் இடம் பெறாது. பேசுவது அனைத்தும் பொது வாகவே கூறப்படுகிறது'' எனும் வா. செ. குழந்தை சாமியின் கூற்று ஒப்பு நோக்கத்தக்கது.

குறள் கருத்துக்கள் தமிழன், தமிழனாக வாழ்ந்தால் மட்டும் போதாது. இந்தியனாக மட்டும் வாழ்ந்தால் போதாது. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தவே எழுதப்பட்டதாகும். மனிதர் களைப் போல வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அத் தகையோரை, நல்வழிப்படுத்தும், வாழ்வியல் நூலாகக் குறள் விளங்குகிறது. அதனால்தான், தமிழ் என்றோ மொழி என்றோ தனித்து அவர் பேசவில்லை.

பிறருக்குத் தீமை செய்யாமல் இருப்பதே வாய்மை எனவும், பிறர் நாண நன்னயம் செய்துவிடல் எனும் அகிம்சையையும், சூது, கள்ளுண்ணாமை, புலால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்ணாமை, பிறனில் விழையாமை, புறங்கூறாமை முதலிய கருத்துக்களை கூறும் பகுதிகள் யாவும் எந் நாட்டு மனிதனுக்கும், உரிய பொதுக் கருத்தாகும். குளிர் நாடுகளில் மதுவருந்துதல், தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆகவே அவர்களுக்குக் கள்ளுண்ணாமை அதிகாரத்தில் வரும் கருத்துக்கள் ஏற்புடையதாக இருக்க வாய்ப்பில்லை. இதே போன்று, தங்களுடைய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்பற்ற கருத்துக்களை விட்டுவிட்டுத் தேவையான கருத்துக்களை மட்டும் எடுத்துக் கொள்ளுவதற்குக் குறளில் விரிந்த இடமுண்டு.

பகவத் கீதையை அருளிய கண்ணபிரான், அருச்சுனனைப் பார்த்து உபதேசம் செய்யும்போதும் அறங்கள் பேசப்படும். ஆனால், அங்கு வர்க்க பேதங்கள் உண்டு. வருணாச்சிரம தருமம் உண்டு. ஆனால், உலக மக்கள் யாவரும் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கினால், மனித குலம் அனைத்திற்கும் உரிய பொதுவான அறங்களை விளக்கிச் செல்கிறார் வள்ளுவர். தமக்குப் பின்பற்றுவதற்கு எளிமையாக இல்லை என்ற காரணத்தினால் இதனைப் புறக்கணிக்க முயற்சி செய்வது ஏற்புடையதாகாது. வள்ளுவர் காலத்தில் சில கருத்துக்கள் ஏற்புடையதாக இருந்திருக்கும். அவருக்குப்பின் இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்னர், சமுதாய நிலை எவ்வளவோ மாறியும் வளர்ந்தும் காணப்படுகிறது. காலத் தேவைக்கேற்ப, நாமும் மாற வேண்டியது தேவைதான். ஆனால், எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துக்கள் எவ்வளவோ திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றன. சான்றாக,

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்'' *(1062)*

''ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்'' *(1066)*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'' (656)

என்ற குறள்களின் மூலம் இரந்து உயிர்வாழ்பவர்களை வெறுக்கிறார், வள்ளுவர். இந்த 'இரப்பவர்' என்பவர்கள் அன்றும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும். இந்நிலை மாறினால்தான், வள்ளுவர் காண நினைத்த,

''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'' (734)

என்ற குறளில் சுட்டப்படுகின்ற நாட்டின் வளத்தைக் காண இயலும்.

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'' (236)

என்ற குறளில் ஒரு தனிமனிதனின் கடமையை வற்புறுத்துகிறார். இதுபோலத் தனி மனிதக் கடமைகள், குடும்பக் கடமைகள், சமூகக் கடமைகள் பலவற்றைக் குறள் பரந்துபடக் கூறுகின்றது.

''வசைஇலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்'' (239)

என்ற குறளில் ஒரு நாட்டின் வளமானது, அது பெற்றெடுக்கிற மக்களைப் பொறுத்துள்ளது என்கிறார். தரமும், தகுதியும் மிக்க ஒருவர் தாமாகவே சமுதாயத்தில் உண்டாவதில்லை. அத்தகைய ஒரு சூழ்நிலையை அச்சமுதாயம்தான் உருவாக்க வேண்டும் என்ற உயரிய கருத்தை வற்புறுத்துகிறார். தனிமனிதனை, மகாத்மாவாக்கியது சூழல்தானே?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிஞர்கள் பலர் சுட்டுவதைப் போல இல்லாத ஒரு கற்பனை நாட்டை வள்ளுவர் பாடவில்லை. ஒரு நாட்டின் தேவை இன்னதென்று எதிர்பார்ப்புணர்வுடன் இருக்கும் நாட்டையே எடுத்து மொழிகிறார்.

உலக அரங்கில் நிற்கக் கூடிய குறள் நூலை தேசியம் எனும் குறுகிய எல்லைக்குள் கொண்டுவந்து சேர்க்கலாமா என்ற வினா எழுவது இயல்பே. இந்திய மண்ணில், தமிழகத்தில் இந்நூல் தோன்றியது என நிலைநிறுத்தத் தான் இதனைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என வற்புறுத்தப்படுகிறது.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' *(423)*

என்ற குறள்மொழிக்கிணங்க, குறளில் உள்ள கருத்துக்கள் உலகத்திற்கு, நாட்டிற்குப் பொதுவானவை என அறியச் செய்து பரப்புதல் வேண்டும். எனவே, கறிக்குதவாத ஏட்டுச் சுரக்காயாக அந்நூல் அமையவில்லை. குறளறம் உலகப் பொதுமையைக் கொண்டதாதலின் இதனைப் பரப்புதல் தேவையானதாகும்.

''திருக்குறள் தேசிய மறையாக ஒத்துக்கொள்ளப் படுவதால், அந்நூலுக்கு முன்பில்லாத தனிப் பெருமை கூடிவிடப் போவதில்லை. முன்னரே, திருக்குறள் நூற்றுக்கும் மேலான மொழிகளில் பெயர்க்கப்பெற்ற சிறப்புடையது. இதனால், உலக இந்திய மொழியான தொல் தமிழுக்கும் கூடுதலான பெருமை சார்ந்து விடப் போவதில்லை. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருவாசகம் முதலான நிலைச் செல்வங்களைப் பெற்றெடுத்த தமிழன்னைக்குத் திருக்குறள் தேசிய மறையாவதால் எக்களிப்பு உண்டாகாது.

நாடு எக்கேடு கெட்டாலென்ன? என்று வீண்மை பேசுபவர்கள்தாம் தேசியக் கொடி, தேசியப் பறவை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசியப் பாட்டுப் போதும் என்று வாளாவிருப்பர். கொடியும், பறவையும் அறிவூட்டுமா? செவ்வழி காட்டுமா? சிந்தனையைத் தூண்டுமா?'' எனும் வ.சுப. மாணிக்கனார் கருத்து சிந்திக்க வைப்பது.

தேசிய இலக்கியமாவதற்கு அனைத்துத் தகுதியும் உள்ள திருக்குறள் இதுவரை ஏன் தேசிய இலக்கியமாக ஏற்கப்படவில்லை. அதற்குரிய தடைகளும் விடைகளும் பின்வருமாறு:

தடைகள்

1. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பெரும் பிரிவாகப் பிரிக்கப் பட்டுள்ளது என்பது யாவரும் அறிந்ததே. இதில் உள்ள அறத்துப்பால் கருத்துக்களும்பொருட்பால்கருத்துக்களும் எந்நாட்டவரும், எம் மதத்தினரும், எவ்வினத்தவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன. மூன்றாவ தாக அமைந்த 'காமத்துப்பால்' என்ற பிரிவுதான் சிக்கலுக்குரியது. 'காமத்துப்பால்' தமிழர்க்கே உரிய சிறந்த நூல் என்று கூறுவதற்கும் இவ்வியலே அடிப்படை யாக உள்ளது. தமிழர்க்கு என்றே சிறப்பாக எழுதப் பட்ட 'காமத்துப்பால்' எனும் இயல் திருக்குறளில் இடம் பெற்றுள்ளதால் குறளை உலகப் பொதுமறை அல்லது தேசிய இலக்கியம் என்பது பொருந்துமா என்று ஒரு சாரார் வினவுகின்றனர்.

2. நம் தமிழ்நாட்டிலேயே வள்ளுவரைப்பற்றியோ, குறளைப் பற்றியோ, அறிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு பொதுமக்கள் யாரும் ஆர்வம் காட்டுவதில்லை. இதுவே மிகப் பெரிய குறையாகும். நம்மைச் சேர்ந்தவர் களிடையே குறளைப் பரப்ப முயற்சி செய்யாமல் இதனை எவ்வாறு தேசிய அளவிலும், உலக அளவிலும் எடுத்துச் செல்ல முடியும்? இக்கேள்விக்கு மறுதலையாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுந்த பிறிதொரு வினா. உலகம் முழுவதற்கும் பொதுவான குறளைத் தேசியம் என்ற சிற்றெல்லைக்குக் கொணரலாமா? இதுவும் சிந்தனைக் குரியதுதான்.

3. திருக்குறள் நம்மை விட்டு, நம் தமிழ்நாட்டை விட்டே வெளியே செல்லவில்லை. பக்கத்து மாநிலத்தவர்களான, தெலுங்கருக்கோ, கன்னடத்துக்காரருக்கோ இதன் பெருமையை விளக்காமல், இந்திய இலக்கியங்களிலே 'திருக்குறள்' தான் சிறந்தது என்று எவ்வாறு நிருபிப்பது?

விடைகள்

காமத்துப்பால் தமிழர்க்கு உரியது. அதனை வைத்து வள்ளுவர் குறளை இயற்றியுள்ளார். அதனால் தான் அது பிறமொழியினரால், பிற நாட்டாரால், பிற இனத்தாரால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு உட்பட்டுள்ளது என்போர் கூற்றுப் பொருத்தமானதான தன்று.

ஆண் பெண் உறவுநிலை என்பது அனைவர்க்கும் பொதுவானது. எந்நாட்டு மக்களுக்கும், காதல் வாழ்வு என்பது பொதுவானதுதான். இல்லறநெறிகள் யாவும் தமிழர்க்கு மட்டுமே உரியன என்று கூறுவதைச் சிறப்பாகக் கொள்ளப்பட மாட்டாது. காமத்துப் பாலைப் பாடியதினால் குறளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறும் மொழியார்க்கோ, நாட்டார்க்கோ இல்வாழ்க்கை புதிதன்று. ஆனால் அகமரபுகள் மட்டும் தமிழர்க்குரியவை.

1. முனைவர் மு. வரதராசன் அவர்களும் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் எனும் தம் நூலில் வள்ளுவத்தை காமத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் எனும் முறை மாற்றி அமைத்து விளக்கம் கூறியுள்ளார். அந்நூலின் முன்னுரையில், ''காதலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளும், வாழ்க்கைப் படிகள். அறமே வாழ்க்கையின் உயிர்நிலை என்று விளக்கும் நோக்கத்தால் காமத்துப் பால், பொருட்பால், அறத்துப்பால் என்னும் முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது'' என்று கூறியுள்ள கூற்று இங்கு உற்றுநோக்கத்தக்கது.

2. முது பெரும் புலவர் தண்டபாணி தேசிகரும் ஓரிடத்தில், காமத்துப்பால் பற்றிக் கூறும்போது, ''மக்களின் வாழ்வைத் தொடங்கி வைப்பதும், மனிதனை நிறைவு பெறச் செய்வதும் திருமணம். அதன் அமைப்பையும், முறைகளையும் வகுப்பதே காமத்துப் பால்'' என்ற கூற்றும் நினைவிற் கொள்ளத்தக்கது.

3. 'பெசுகி' எனும் மேலைநாட்டுப் பாதிரியார், திருக்குறளை மொழிபெயர்க்கும்போது, அறத்துப்பால், பொருட்பால் எனும் இரண்டு பிரிவுகளை மட்டுமே மொழிபெயர்த்துள்ளார். காமத்துப்பாலை அவர் தவிர்த்ததற்கான காரணத்தை அவரே கூறும் போது, நான் 'கிறித்துவத் துறவி' அதனால்தான் நான் அதனைத் தவிர்த்தேன் என்ற கூற்றும் நோக்குதற்குரியது.

4. திருக்குறளை தேசிய இலக்கியமாக்க வேண்டும் என்றால், அதற்கு இந்திய மண்ணின் தன்மை இருக்க வேண்டும். அது இந்நூலில் இருக்கிறது. காமத்துப் பாலில் தெளிவாகிறது. மரமானது உயர்ந்து வளர்ந்து பூத்துக் குலுங்கி விண்ணை எட்டினாலும் அதனுடைய வேர் பூமியில்தான் இருக்கிறது. அதுபோல, திருக்குறளும் உலகப்பொதுமறை என்று போற்றப்பட்டாலும் உலகத்தார்க்குரிய அறங்ளைச் சொன்னாலும், மூன்றாம் பாலில் மண்வாசனை காணப்படுவது உண்மையாகும். இந்திய மண்ணில் உள்ள தமிழ்நாட்டில் தமிழ்மொழி பேசும் மக்களிடையே தோன்றி வளர்ந்த குறளற மரம் உயர்ந்துள்ளது. தமிழர்க்கே உரிய அகப்பொருள் மரபினைப் பெற்று சிறந்து விளங்குகிறது. இந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முத்திரைதான் எழுதியவரையும், மொழியையும் இனங் காட்டும். இதனை வைத்துத்தான் இந்நூல் இந்திய மண்ணில் எழுந்தது என்பதை உறுதி செய்ய இயலும்.

இரண்டாவது வினாவும் சிந்திக்கத் தகுந்ததே. உலக இலக்கியத் தகுதி பெற்ற குறளை நாம் மதிப்பிடத் தவறினோம்.

1. நாம் தொடக்கத்திலிருந்தே திருக்குறளை மிக உயர்ந்த நிலையில் வைத்துப் பார்க்கத் தொடங்கி விட்டோம். அதனை 'நீதிநூல்', 'அறநூல்' என்ற போர்வையைப் போர்த்தி அதனை மக்கள் அறிந்து கொள்ளக் கூடிய இயல்பான நிலையிலிருந்து தள்ளி வைத்து விட்டோம்.

2. திருக்குறளை ஓர் இலக்கியமாகப் பார்க்காமல், அதற்கு ஒரு தெய்வத் தன்மையைப் புகுத்தி, நம்மை விட்டு விலகச் செய்து விட்டோம். திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியன் அவர்கள், இதனைக் கிறித்துவருக்கு பைபிள் வேத நூலாகவும், முகம்மதியருக்கு குர்-ஆன் வேத நூலாகவும் இருப்பதுபோல், நம்முடைய தமிழர்க்கு இது 'வேதநூல்' 'மறைநூல்' என்று கூறுகிறார். இவ்வாறு ஒரு தெய்வத்தன்மை ஏற்றப்பட்டதே தவிர இதனை ஒரு வாழ்வியல் நூல் என்றும், சமுதாயத்திற்கு ஏற்ற நூல் என்றும் எடுத்துச் சொல்லுதற்கும் மேற்கொண்டொழுகவும் ஆளற்றுப் போனது.

சமீபத்தில் ஆனந்தவிகடன் (19-09-88, 02-10-88) இதழ்களில் வெளிவந்த துணுக்குகள் நினைவு கூரத் தக்கன.

''இதே வள்ளுவர் கோட்டத்திலே நடிக, நடிகை கலந்துக்கற நிகழ்ச்சின்னா நூறு, அம்பதுக்கு டிக்கெட்டு வாங்கிட்டு ஆயிரக்கணக்கிலே, வந்து குவியறாங்க.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய திருக்குறளைக் கட்டணம் இல்லாம ப்ரீயா சொல்லிக் கொடுத்தாலும் வரமாட்டேங்கறாங்க. உருப்படணும்கற எண்ணம் ஒருத்தருக்கும் வரமாட்டேங்குது பாருங்க...இன்னிக்கு வந்ததே, திருக்குறளாரையும் சேர்த்து மொத்தம் பதினொன்கு பேர்தான்.''

''நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்னை, கோகலே ஹாலில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அந்த விழாவில் கலந்துகொண்டு, சொற்பொழிவாற்றிய மூதறிஞர் ராஜாஜி, 'வ.உ.சி. சிறந்த தமிழறிஞர் திருக்குறளுக்கு அவர் எழுதியுள்ள விளக்க உரை மிக மிகச் சிறப்பு வாய்ந்தது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக யாரும்அதனை விலை கொடுத்து வாங்கத் தயாராக இல்லை. எனவே, நானே, அவ்வளவு புத்தகங்களையும் விலைக்கு வாங்கி, இலவசமாக பலருக்கு வழங்கினேன். நான் இலவசமாக வழங்கிய வ.உ.சி.யின் குறள் உரைகளைக் கூடப் பலர் பெற்றுக் கொள்ளத் தயங்கினார்கள். அந்த அளவிற்கு, இதெல்லாம் தங்களுக்குத் தேவையில்லாதவை எனக் கூறினார்கள்'' என்றார்.

நாற்பதாண்டுகளுக்கு முன்பே திருக்குறளுக்கு இந்த நிலை. இன்றும் அந்த நிலை எள்ளளவும் மாறவில்லை என்பது வேதனைக்குரியது.

திருக்குறள், படித்தவர்கள் மத்தியிலேயே செல்வாக்கிழந்து செல்கின்றது. கல்லூரி மாணவர்களாயினும் சரி, பாடப் புத்தகங்களில் இடம் பெற்றுள்ள திருக்குறள் பகுதியினைப் படிப்பதற்கே தயங்குகின்றனர். தேர்வில் திருக்குறள் பகுதியில் வினாக்கள் கேட்டுவிட்டாலோ விட்டு விடுவார்கள். கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு கூறினால், பாமர மக்கள் என்ன செய்வார்கள். இதற்கு ஒரே வழி, திருக்குறளுக்கு இருக்கும் தெய்வத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மையை நீக்கி, இது வாழ்வியல் நூல், மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்காக எழுதப்பட்ட நூல் என்று விளக்கி, எளிமையான பகுதிகளை விளக்கி அவர் களுக்குப் புரியச் செய்தலே ஆகும்.

மூன்றாவதாகக் கூறப்பட்ட பிறமொழி இலக்கியங் களை விடச் சிறந்தது திருக்குறள் என்பதை நிலை நிறுத்த வேண்டும். சான்றாக, அக்காலத்தில் வட இந்தியாவிலும், சீனாவிலும் தோன்றிய கீதை, கன்பூசியசு தத்துவங்களை திருக்குறளோடு ஒப்பிட்டு நோக்கினால் இவ்வுண்மை புலப்படும்.

''உனக்குத் தீங்கு செய்வோரைத் தண்டிக்க! அவர் களிடம் கனிவு, கருணை காட்டாதே!'' என்று கீதையும் 'நன்மை செய்தார்க்கு நன்மை செய்க! தீமை செய் தார்க்குத் தீமை செய்க' என்று கன்பூசியசு தத்துவமும் கூறுகிறது. ஆனால், குறளோ,

'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு' *(987)*

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்' *(314)*

என்கிறது. மேலே கூறிய நூல்களுக்கு முற்றிலும் மாறு பட்ட கருத்தினை வள்ளுவம் கூறுவதினால்தான் அது இன்றும் நிலைத்து நிற்கிறது.

மனுதர்மசாத்திரக் கொள்கையையும், திருக்குறளை யும் ஒப்பிட்டு நோக்கினால் இவ்வுண்மை மேலும் நன்கு புலப்படும்.

தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும், காப் பாற்றப் பறவைகளையும், விலங்குகளையும் கொன்று தின்னலாம். ''பிராமணன் புலாலை உண்ணலாம்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று கொலை செய்தலையும், புலால் உண்ணுதலையும் மனுதர்மம் உடன்படுவதோடு இவ்வாறு ஒழுகினால் பாவம் உண்டாகாது என்றும் சொல்லுகிறது. திருக்குறளோ, 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்று கூறுவதோடு 'கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உயிருந் தொழும்' என்று கூறுகிறது.

மனுநீதி என்ற நூல், சமசுகிருத தரும சாத்திரங்களிலேயே பழைமையானது. இது வெறும் அறநூலாக மட்டும் அல்லாமல், சமூகத்தை வகுப்புகளாகப் பிரித்துக் கொண்டு அவ்வகுப்பாருக்குரிய வழக்காற்று, ஒழுக்கவியல், சமூகவியல், உளவியல், பொருளியல், அரசியல், வாழ்வியல் எனும் பல துறைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. திருக்குறளோ இந்நூலைவிட ஒருபடி மேலே சென்று பொது நிலையில் அறக்கருத்துக்களை வலியுறுத்துகிறது. 'உயிர்' என்று பொது நிலையில் பேசுவதாக வேறெந்த இலக்கியத்தையும் எடுத்துக் காட்ட முடியவில்லை என்பது குறிக்கத் தகுந்தது. இதனால்தான்,

''வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி''

என்று மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் வியந்து போற்றுகின்றனர்.

இதேபோன்று, இந்திய மொழிகளில் இருக்கும் அனைத்து அற நூல்களையும் திருக்குறளோடு ஒப்பாய்வு செய்து, அனைத்து நூல்களிலும் திருக்குறள் மேம்பட்டது என்ற உண்மையை நிலைநாட்ட வேண்டும். இதனை மொழி வல்லுநர்கள் முயற்சி செய்து வெளிக் கொண்டு வந்தால், திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அமைய அடிப்படை அமைத்தது போலாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய இலக்கியமாக்குவதற்குரிய படிநிலைகள்

1. மொழி பெயர்ப்பு

திருக்குறள் இதுவரை உலகமொழிகள் அனைத்தனுள்ளும் முப்பத்தொரு மொழிகளில் மட்டுமே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மொழிபெயர்ப்பு ஆங்கில மொழியிலே இடம்பெற்றுள்ளன. இந்திய மொழிகளிலும், உலகமொழிகளிலும் திருக்குறளுக்கு மொழி பெயர்ப்பினை உருவாக்க வேண்டும். ஒரு சிறந்த மொழி பெயர்ப்பு இல்லாததினால்தான், அஃது 'உலகப் பொது மறை' என்று நம்மால் மட்டும் கூறுப்படுகின்ற நிலை மாறி உலக மக்கள் அனைவரும் கூறுகின்ற நிலை உருவாகும். திருக்குறளில் இருக்கும் 1330 குறள்களையும் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டும் என்ற அவசிய மில்லை. எல்லா நாட்டார்க்கும், பொதுவாக அமையும் கருத்துக்களைமட்டும் மொழிபெயர்ப்பு செய்து இதனை நிலைநிறுத்தலாம்.

2. பாமர மக்களிடையேயும் மற்றவர்களிடையேயும், பரப்புவதற்கு மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தலாம். அண்மையில் டெல்லி தொலைக்காட்சியினர், 'இராமாயணம்' எனும் நீண்ட தொடர் நிகழ்ச்சியினை ஒளி பரப்பி, மக்கள் மத்தியில் எப்படி ஒரு விழிப்புணர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் உண்டாக்கினார்களோ அதே போன்று குறளை உருவாக்க வாய்ப்புண்டு. மக்கள் மத்தியில் இன்று அதிகமாகப் புழக்கத்தில் உள்ள தொடர்பு சாதனங்களின் மூலம்தான் இதனைப் பரப்ப முடியும். அவர்களுக்கு எத்துறையில் ஆர்வம் ஏற்படுகிறதோ, அதன் மூலம் இதனைச் செய்யலாம். குறள் கருத்துக்கள் அடங்கிய சிறுகதையினையோ, நாடகத்தினையோ ஒளிபரப்பலாம். செய்திப் படங்கள் தயாரித்தும் வெளியிடலாம். பாரதியார், பாரதிதாசன் பாடல்களில்ஒருசிலவாவது மக்கள்மத்தியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிந்துள்ளது. அதற்குக் காரணம் அது திரைப்படப் பாடல்களாக வெளிவந்ததினால்தான். இல்லையென்றால், எத்தனை பேருக்கு அவர்களுடைய கவிதைகள் தெரிந்து இருக்கும்? கிராம மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கைச் சூழலுக்கேற்ற மிக எளிமையான குறள்களை கதை வடிவில் அமைத்து, நாட்டுப்புறக் கலைகளான தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவற்றின் மூலம்கூட எட்டச் செய்யலாம்.

3. தமிழ்நாட்டிலே எந்தத் துறைக் கல்லூரியாக இருந்தாலும் (பொறியியல் & மருத்துவம்) எந்தத் துறைப் படிப்பாக இருந்தாலும், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், எல்லாக் கூட்டங்களிலும் ஒரு குறிப்பிட்ட பகுதி திருக்குறளைப் பாடமாக வைத்து எல்லோரும் பயிலக்கூடிய நிலைமையை உருவாக்கினால், அஃது இந்திய நாடு முழுவதும் பரவுவதற்குரிய முதல்வாய்ப்பைப் பெறும்.

4. கல்வி நிலையங்களில், பரப்புவதற்கு மாணவர்களிடையே, போட்டிகள் பல நடத்தி ஊக்குவிக்கலாம். பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, மனனப்போட்டி போன்ற பல போட்டிகளை நிகழ்த்த வேண்டும். போட்டிகளில் பங்கு கொள்ளும் அனைத்து மாணாக்கர்க்கும், பரிசுகள் வழங்க வேண்டும்.

5. பல்வேறு பெயர்களில், அமைந்துள்ள 'இயக்கங்கள்' இதனை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். தமிழில்தான் பெயர்ப் பலகைகளை எழுத வேண்டும் என்றும், குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர்தான் வைக்கவேண்டும் என்று விளம்பரம் செய்வது போல், எளிமையான குறளைப் பொருளுடன் எழுதி ஆங்காங்கே, பொது இடங்களில் மக்கள் பார்வையில் தெரியும்படி அமைக்கலாம். அரசு கூடச் சட்டத்தின் மூலம் இதனைச் செய்யலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. பதிப்பகங்கள், 'திருக்குறள்' நூலினை மலிவுப் பதிப்பில் விற்பனை செய்து விற்பனைக்குக் கொண்டு வரலாம். எளிமையான குறள்களை மட்டும் தேர்ந் தெடுத்துப் பொருளுடன் பதிப்பித்து வெளிக் கொண்டு வரச் செய்யலாம்.

7. திருக்குறளுக்கு ஒரு சிறந்த ஆய்வுப் பதிப்பினை, உருவாக்கி, படித்தவர்கள் மத்தியில் அதனை உயர்வு பெறச் செய்யவேண்டும். வளர்ந்து வருகின்ற புதுப்புதுத் துறைகளான சமூகவியல், ஒப்பியல், அறவியல் போன்ற பல துறைகளிலும் ஆய்வு நிகழ்த்தப் பெற்று, திருக் குறளுக்கு ஒரு சிறந்த ஆய்வுப் பதிப்பை உருவாக்க வேண்டும்.

8. அறிஞர் பெருமக்கள் யாராக இருந்தாலும், மாதத்துக்கொருமுறை, கருத்தரங்கினை நடத்தி அறிஞர் பெருமக்களைக் கூட்டி, புதுப்புது வழிமுறைகளைக் கண்டறிந்து திருக்குறளை நாடறியச் செய்ய முயல வேண்டும்.

9. பழமையிலே ஊறிப் பழைய கருத்துக்களையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற மொழிக் கேற்ப, திருக்குறளுக்கு சரியான விமர்சன நூல், திறனாய்வு நூல் வெளிவருதல் அவசியம். அண்மையில் வா. செ. குழந்தைசாமி அவர்கள் எழுதிய 'வாழும் வள்ளுவம்' என்ற நூலும், கு.ச. ஆனந்தன் அவர்கள் எழுதிய 'திருக்குறளின் உண்மைப் பொருள்' எனும் நூலும் வரவேற்கத்தக்கன. இத்தகைய சோதனை முயற்சிகள் திருக்குறளுக்கு நிகழ்த்தப் பெறுதல் வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணை நூற்பட்டியல்

ஆய்வு நூல்கள்

அறவாணன், க. ப. : தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ் கோட்டம், சென்னை, 1987.

அறிவுநம்பி, அ. கூத்தும் சிலம்பும், காரைக்குடி, 1980.

ஆனந்தன், கு. ச. வள்ளுவர் தந்த பொருளியல் கோட்பாடுகள், சிவலிங்க நூற் பதிப்புக் கழகம், ஈரோடு, 1985.

குறள் கூறும் ஊழ், குறளிய வெளியீடு, ஈரோடு, 1984.

கல்யாணசுந்தரனார், திரு. வி., பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கைத்துணை, சென்னை, பதினோராம் பதிப்பு, 1961.

காமாட்சி சீனிவாசன், குறள் கூறும் சமுதாயம், திருக்குறள் ஆய்வகம், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1975.

சாலை இளந்திரையன், சமுதாய நோக்கு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1980.

சீனிவாசன். அ. பழசும் புதிசும், கவிதா பதிப்பகம். மதுரை, 1980.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சோமசுந்தர பாரதியார், திருவள்ளுவர், நாவலர் புத்தக நிலையம், மதுரை, திருத்திய பதிப்பு, நவம்பர்-1971.

மீனாட்சி சுந்தரம், தெ. பொ. வள்ளுவரும் மகளிரும், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, ஆறாம் பதிப்பு, 1983.

மோகனராசு, கு. தொல்காப்பியமும் திருக்குறளும், திருக்குறள் ஆய்வகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1986.

வேலுப்பிள்ளை, ஆ. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1985.

கட்டுரை

7894

வேலு. இரா. 'திருக்குறளும் ஊழும்' பதினோராவது இந்திய பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை— தொகுதி-1, அண்ணாமலை நகர், சிதம்பரம்.

இலக்கிய நூல்கள்

கம்பராமாயணம்
சிலப்பதிகாரம்
சீவகசிந்தாமணி
திருக்குறள்
தொல்காப்பியம்
புறநானூறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

FORWARDED FREE OF COST; AND WITH
THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF
EDUCATION, GOVERNMENT OF INDIA, NEW DELHI

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Access in
Class on 3516133
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''வையத்[illegible] வாழ்ந்து மற்[illegible]
வாழ்விற்கும் வழிகாட்டியாக விளங்குவது
வள்ளுவம். இவ்வள்ளுவத்தை அனைவரும்
கற்றறிதல் வேண்டும்...''

புலவர் **ச. தியாகராசன்.**
(திருக்குறள்-வழிகாட்டி என்ற நூலில்)

புலவர் **ச. தியாகராசன்** அவர்களின்
திருமகளான செல்வி. **தாமரைச்செல்வி,**
தன் இளம் முனைவர் (எம். பில்) தகுதிக்காகத்
திருக்குறள் பதிப்புகளை ஆய்ந்தவர். இப்பொழுது
முனைவர் தகுதிப்பாட்டிற்காகத
திருக்குறள் சுட்டும் சமூக நிறுவனங்களைப்
பற்றி ஆய்வு மேற்கொண்டுள்ளார். சில
குறட்பாக்களில் உண்டான சிக்கல்களைக் கூறி
நயமாக அவற்றைத் தீர்க்கும் அவர்தம்
சிந்தனைவீச்சுகளின் தொகுப்பே இந்நூல்.

புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி மையத் தமிழியல் துறை
'தேடல்' வரிசை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar